1423

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

1423

OFFICE OF THE ... MAR 1936 ... MADRAS

N34.13.2
19965

தனிப் பிரதி விலை அணு 4
ஆண்டுக் கையொப்பம் ரூ. 2—8

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௧௫	பவ ஆண்டு புரட்டாசித் திங்கள் 1934ஆம் ஆண்டு செப்டம்பர்மீ--அக்டோபர்மீ	பரல் ௨

செந்தமிழ்ச் செல்வி

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

(Editorial Board Members)

தலைவர்

1. திருவாளர் M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள், B. A.,
   பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.

---

2. ,, கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A., M.L.,
   தலைவர், மணிவாசக மன்றம், திருநெல்வேலி.
3. ,, பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
   தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.
4. ,, துடிசைக்கிழார் சிதம்பரனாரவர்கள்,
   போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், திருவாரூர்.
5. ,, பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,
   தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.
6. ,, T. S. கந்தசாமி முதலியாரவர்கள், B. A.,
   வழக்கறிஞர், சாத்தூர்.
7. ,, ஆ. கார்மேகக் கோனாரவர்கள்,
   தலைமைத் தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.
8. ,, வித்வான் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்,
   தலைமைத் தமிழாசிரியர், செயிண்ட்சேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.
9. ,, அ. மு. சரவண முதலியாரவர்கள்,
   தமிழாசிரியர், அரியலூர்.
10. ,, காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளையவர்கள், B. A.,
    தருமபுரவாதீன வித்துவான், சென்னை.

பொருளடக்கம்

கியூரி அம்மையார் (முகப்புப் படம்)

திருநாவுக்கரசு அடிகள் தேவாரம் உரை
மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி.ஏ. ௪௬

சிவஞான போதக் கருத்து
மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி.ஏ. ௫௰

இந்தியாவும் சாவகமும் S. நடராஜ பிள்ளை, பி.ஏ. ௫௭

பதிற்றுப்பத்து விளக்கம்
பண்டித அ. நடராஜ பிள்ளை ௬௰

இத்தாலிய தேயப்பழங்குடிகள் க. இராமநாத பிள்ளை, B.A. [illegible]

மண்ணியல் சிறுதேர்
அ. சிதம்பரநாதன் செட்டியார், பி.ஏ., [illegible]

தமிழ்மன்னர் பெயர் [illegible]

அச்சுதப்ப நாயக்கர் [illegible]

வடிவுதிருந்த அறிவு வளர்ந்த வகை [illegible]

உளநூல் மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ. [illegible]

கார் நாற்பது—ஆங்கில மொழிபெயர்ப்பு
T. B. கிருஷ்ணசாமி முதலியார், M.A., B.L. ௮௮

கறங்கு என்னுங் காற்றாடி
C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், பி. ஏ., பி. எல். ௯௧

கியூரி அம்மையார்
கு. ஞானசம்பந்தம் ௯௫

மதிப்புரை ௯௯

செய்திகளும் குறிப்புகளும் ௧௦௦

இணைப்புகள்:—

தமிழ்த் தோற்றத் தேற்றம் T. S. கணேசபிள்ளை

தொல்காப்பியம் உரையுடன் [illegible]

கியூரி அம்மையார்

MADAME MARYA CURIE

(கதிரி (Radium) கண்டவர்)



சிலம்பு ௧௫] பவ—புரட்டாசி [பரல் ௨

திருநாவுக்கரசு அடிகள் தேவாரம்

உள்ளத் திருக்குறுந் தொகை

முன்னெஞ் சம்மின்றி மூர்க்கராய்ச் சாகின்றார்
தந்நெஞ் சந்தமக் குத்தா மிலாதவர்
வன்னெஞ் சம்மது நீங்குதல் வல்லீரே
என்னெஞ்சி லீசனைக் கண்ட தென்னுள்ளமே.

பதவுரை :—

தம் நெஞ்சம்—(தாம் உலக வாழ்வில் பேரின்ப நிலையை அடையும்படி இறைவனாற் கொடுக்கப்பெற்ற) தமது உள்ளத்தை

தமக்கு இலாதவர்—தமக்குப் பயன் தரும்படியாகச் செய்யத் தக்கனவற்றைச் செய்து திருத்தாத மக்கள் பலர்

முன்—தாம் உலகில் வாழ்ந்திருக்கும் காலத்தில்

மூர்க்கராய்—பேரின்ப வாழ்வைப் பற்றி ஒன்றும் அறியாத மூடராக

நெஞ்சம்இன்றி—திருந்திய தூய நெஞ்சு இல்லாமல்

சாகின்றார்—தமது உயிர் கூற்றுவனால் பரு உடலினின்று பிரிக்கப் பெற்று நில உலகை விட்டுச் செல்கின்றார்.

வன்னெஞ்சம் அது நீங்குதல் வல்லீர்—(இது மிகவும் இரங்கத்தக்க செயல். மக்களே! நீங்கள் உலகப்பற்றை விட்டுத் தன் முனைப் பின்றி இறைவனை வழிபட்டால்) உங்களுடைய திருந்தாத நெஞ்சத்தினது வன்கண்மை நீங்கித் திருந்தி அதனால் நீங்கள், பலர் முன் இறந்தது போல இறக்காமல் இறைவனைக் கண்டு பேரின்பம் அடைதற்கு வலிமை யுடையீர். (ஆகையால் நீங்கள் வீழ்நாள்படாமல் இறைவனை வழிபடுமின்.)

19965

உள்ளம் என்நெஞ்சில் ஈசனைக்கண்டது—(நான் சொன்னதை நீங்கள் ஐயுறவேண்டாம்.) உயிரானது எனது திருந்திய தூய நெஞ்சில் இறைவனைக் கண்கூடாய்க் கண்டு அறிந்தது. அதாவது நான் இறைவனை என் உள்ளத்தில் கண்டறிந்து உணர்ந்து பேரின்ப நிலையை அடைந்தேன். (நான் இறைவனை வழிபட்டு எனது நெஞ்சம் திருந்தித் தூய்மை அடைந்து சாகாது அவனைக்கண்டு பேரின்ப நிலையை அடைந்தது போல நீங்களும் உங்கள் நெஞ்சம் திருந்தித் தூய்மை அடையப் பெற்றுச் சாகாது பேரின்ப நிலையை அடையலாம்.) அதற்காக இறைவனை வழிபடுமின் என்பது குறிப்பெச்சம்.

விளக்கவுரை :—

தம் நெஞ்சம்—எல்லா உயிர்களுக்கும் போகம் நுகர்தற்குப் பொதுவாய் அமைந்திருக்கிற புவன போகங்கள் போல அன்றி மக்கள் ஒவ்வொருவரும் சிறப்பாகப் பயனடைதற்கு உரியதாய் உள்ளமிருத்தலால் தம் நெஞ்சம் என்றார். இறைவனால் பேரின்பம் அடையும் கருவிகளாக உயிர்களுக்குக் கொடுக்கப்பெற்ற தனு கரண புவனபோகங்களுள் (உடல் உட்கருவி உலக நுகர்வுகள்) தனு கரணங்கள் சிறப்புப் பொருள்களாயும் புவனபோகங்கள் பொதுப் பொருள்களாயு முள்ளன.

தமக்கு (தாம்)—தாம் : அசை.

இலாதவர்—நெஞ்சம் உடையரா யிருந்தும் அதனைத் திருத்தித் தூய்மை செய்து அதனால் அடையப்பெறும் பேரின்பப் பயனை அடைத லின்மையால் தமக்கு இல்லாதவர் என்றார். ஒருவர் ஒரு பொருளை உடையராந் தன்மை, அவர் அப்பொருளைப் பயன்படுத்துதற் பற்றிக் கூறுதல் தமிழ் ஆன்றோர் நூல்வழக்கு.

நெஞ்சம்இன்றி—இங்கே நெஞ்சம் திருந்துதல் இன்றி என்ற பொருள்பட நின்றது. பயிர்விளையாக் களர்நிலம் ஒருவற்கு உடைமையாயிருப்பினும் அஃது அவருக்கு இல்லாததாக எண்ணப்படுதல் போலப் பேரின்பம் விளையாத திருந்தா நெஞ்சம் இல்லாத பொருளாகக் கூறப்பட்டது.

மூர்க்கர்—மூடர்; மலத்தினால் மறைவுபட்ட மயக்க அறிவால் உலக வாழ்வைப் பெரிதென மதித்து வாழ்வின் குறிக்கோளாகிய பேரின்பம் அடைதலை அறியாதவர்? "முத்தி நெறி அறியாத மூர்க்கர்" என்று **மாணிக்கவாசக அடிகள்** திருவாசகம் அச்சோப் பதிகம் 1-வது பாட்டிலும், **அருணந்திசிவாச்சாரியார்** உலகமெல்லாம் '**மூர்க்கராகி**' என்று சிவஞானசித்தியார் 8-வது சூத்திரம் 16-வது பாட்டிலும் பேரின்ப நிலையை அறியாத மக்களைக் கூறியிருத்தல் காண்க.

சாகின்றார்—சாதல் என்பது பரு உடலைப் பிற உடல்களோடுங்கூடிய உயிரினின்றும் வெங்கூற்றுவனால் துறத்தல்: கூற்றுவனாலே உயிர்

துறத்தலுண்டெனின், பின்வரும் பிறத்தலும் உண்டு. இக்கருத்தைத் துறக்கப்படாத உடலைத்துறந்து வெந்தூதுவரோ டிறப்பன். "இறந்தாலிரு விசும்பேறுவ னேறிவந்து **பிறப்பன்** (114,8) என்று அடிகள் தனித் திருவிருத்தத்திற் கூறி அருளினர். இதனால், "சித்தாந்தத்தே சிவன்றன் திருக்கடைக்கண் சேர்த்திச் செனன **மொன்றிலே** சீவன் முத்தராக-வைத்தாண்டு மலங்கழுவி ஞானவாரி மடுத்தானந்தம் பொழிந்து **வரும் பிறப்பை யறுத்து**- முத்தாந்தப் பாதமலர்க்கீழ் வைப்பனென்று மொழிந்திடவு முலகமெலா **மூர்க்கராகி** - பித்தாந்தம் பெரும் பிதற்றுப் பிதற்றிப் பாவப் பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிதுவென்ன பிராந்தி" என்று **அருணந்திசிவாசாரியாரும்**, "இக்காய நீக்கி யினியொரு காயத்திற்—புக்குப்பிறவாமற் போம்வழி நாடுமின்" என்று **திருமூலரும்** கூறிய **சைவசித்தாந்த** உண்மையை அடிகள் கூறி அருளினர். அடிகள் தாம் எடுத்த பிறப்பில் இறைவனருளால் பேரின்ப நிலையை அடைந்திருத்தலைப் பற்றி "ஞானமே காத்து என்னை யாண்டாய் போற்றி" என்று **திருவாரூர்**, **போற்றித் திருத்தாண்டகம்** 9-வது பாட்டில் (246—9) கூறியிருத்தல் காண்க.

வல் நெஞ்சம்அது நீங்குதல் வல்லிரே—வல்நெஞ்சம் - உயிர்கள் ஆணவமல மறைப்பு நீங்கி உய்தற்கு வேண்டப்படும் தனுகரண புவனபோகங்களை (உடல் உட்கருவி உலக நுகர்வுகளை)க் கொடுத்தருளி அவைகளுடன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று எஞ்ஞான்றும் சலியாது தம் பொருட்டு ஒன்றும் வேண்டாது ஐந்தொழில் செய்துவரும் பேருதவியைப் பகுத்தறிவுடைய மக்கள் அறிந்து நினைந்து இளகிக் கரைந்துருகி அவனிடத்து அன்பு செய்யாதிருக்கும் நெஞ்சை அடிகள் வல் நெஞ்சம் என்றார். அது - பகுதிப்பொருள் விகுதி.

இந்த நெஞ்சம் வன்கண்மை நீங்கி இறைவனை நினைந்து கரைந்துருகும் இளகிய தன்மை அடைந்தாலொழிய இம்மையிலே மேலே கூறப்பட்ட பேரின்பநிலை அடைதலாகிய சீவமுத்தத் தன்மை அடைய முடியாது என்பார் வன்னெஞ்சமது நீங்குதல் என்றும், அப்பேர்ப்பட்ட இளகிய நெஞ்சை மக்கள் தங்கள் தவமுயற்சியால் எடுத்த பிறப்பிலே அடையமுடியும் என்பார் நீங்குதல் வல்லீர் என்றும் அடிகள் கூறி அருளினர்.

மக்கள் தாங்கள் எடுத்த பிறப்பிலே பேரின்பநிலை அடைதற்கு இறைவனாற் செய்யப்படும் கடப்பாட்டில் ஒன்றும் குறைவில்லை; மக்களே இறைவன் கருத்தை யறிந்து அதன்வழி ஒழுகாதிருக்கிறார்கள். "தேடிச் சென்று திருந்தடி யேத்துமின்—நாடிவந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்" (119—5) என்று அடிகளும், "என்னாலறியாப் பதந்தந்தாய் யான் அதறியாதே கெட்டேன், உன்னாலொன்றுங் குறைவில்லை" என்று **மாணிக்கவாசக அடிகளும்** கூறி அருளினர். இறை

வனை வழிபட்டு மெய்ஞ்ஞான மடைதலை அடிகள் அடுத்த பாட்டில் "**தூணைத்தாலே வணங்கிட** நன்றால் நம்மனம் வைத்திடு ஞானமாம் ஒன்றானை" என்று கூறி யருளினார். அடிகள் "நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்," என்னும் பேரிரக்க நெஞ்சினை உடையர் ஆதலின் தாம் அடைந்த பேரின்ப நிலையை ஏனைய மக்களும் அடைதல் வேண்டும் என்ற குறிப்புடன் வன்னெஞ்சமது நீங்குதல் வல்லீர் என்றார். வல்லீர் - குறிப்பு வினைமுற்று. வன்மை + ஈர் = வல்லீர்; ஈர் - முன்னிலைப்பன்மை விகுதி. ஏ - அசை.

உள்ளம் என் நெஞ்சில் ஈசனைக் கண்டது—உள்ளம் என்ற சொல் இங்கே உயிர் என்ற பொருளில் வந்தது.

உள்ளம்கண்டது—நான் கண்டேன். காணுதல் என்பது அகக் கண்ணாற் காணுதல். நெஞ்சு என்பது இங்கே உலகவாழ்வில் உலக இன்பம் நுகர்வின் பொருட்டு சங்கற்ப விகற்பங்கள் செய்து ஓயாது சுழலும் நெஞ்சு அன்று; உலகப்பற்று முழுவதும் அற்றுத் தன்முனைப்புச் சிறிதுமின்றி இறைவனையே நினைப்பற நினைந்து பேரா இயற்கைப் பேரின்பம் உணர்ந்து நுகர்ந்து கொண்டிருக்கும் நெஞ்சு. நான்கு உட்கருவிகளும் (அந்தக்கரணங்களும்) ஒன்றாய்ச் சுத்தமாயை சாந்தியாதீத கலையிலுள்ள அருளொளி விளங்கப்பெற்று நின்மலமாயுள்ள நெஞ்சு. 'சிந்தையினுள்ளே தெரிய வல்லார்க்குச் சிந்தையினுள்ளே சிவனிருந்தானே' என்று **திருமூலர்** கூறியாங்கு அடிகள் உள்ளம் என் நெஞ்சில் ஈசனைக் கண்டது என்றருளினர். அடிகள் இந்தப் பாட்டு முன் இரண்டு அடிகளிலும் படர்க்கையில் பொது மக்களுடைய வாழ்க்கை நடையைப்பற்றியும், மூன்றாவது அடியில் முன்னிலையில் மக்களை விளித்தும், நான்காவது அடியில் தன்மையில் தமது சிவானுபூதி நிலையையும் கூறுகின்றார். அடிகள் கூறிய இப்பாட்டினால் அவர்களிருந்த காலத்தில் நமது தென்தமிழ் நாட்டில் பெரும்பான்மையான மக்கள் உலகவாழ்வின் குறிக்கோளை அறிந்து பேரின்பப் பயனை அடையாதிருந்தார்கள் என்பது புலனாகும். ஏறக்குறைய 1300 ஆண்டுகள் கழிந்த இக்காலத்திலும் நமது நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்கள் உலகவாழ்வின் குறிக்கோளை அறிந்து உணர்ந்து பேரின்பப் பயன் அடையாதவர்களா யிருக்கிறார்கள் என்பது நாம் நேரே அறிகிறோம்; ஏனைய நாடுகளின் நிலைமையும் அவ்வாறே யிருக்கின்றது.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.



சிவஞான போதக் கருத்து

[திரு மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

இரண்டாவது சூத்திரம் நாலாவது அதிகரணம்

பதிப்புரிமை ஆக்கியோற்குரியது

(சிலம்பு 9, 370 பக்கம் தொடர்ச்சி)

94. மேலே கூறியவாறு ஐந்தொழில்கள் செய்தற்பொருட்டுப் பலவகைத் தத்துவங்களில் சிவன், அருட்சத்தியுடன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்றலின் சிவ வேறுபாடுகள்பலவும் சத்திவேறு பாடுகள் பலவும் அமைகின்றன. தீயினது சத்தி யொன்றே. அது பலபொருள்களிற் பலவகையாகத் தொழிற்படும் வேறுபாட்டால் சுடுஞ் சத்தி, அடுஞ் சத்தி, விளக்குஞ் சத்தி, கருக்குஞ் சத்தி, உருக்குஞ் சத்தி முதலிய பல பெயர்கள் பெறுதல்போல சிவத்தினொடு பிரிப்பின்றி இயைந்து நிற்கிற அருட்சத்தி யொன்றே, தத்துவங்களைக் கடந்துநிற்கும் நிலையில் பராசத்தி யெனவும் அப்பராசத்தி உயிர்கள் பொருட்டுத் தத்துவங்கள் பலவற்றில் நிகழ்த்துகிற தொழில் வேறுபாட்டால் திரோதான சத்தி, இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியா சத்தி யெனவும் வெவ்வேறு பெயர்களாற் கூறப்படுகின்றாள். தன்னை அடைந்து பேரின்பம் அடையவொட்டாமல் அநாதியே மூலமலம் ஆகிய ஆணவமலம் உயிர்களின் வேட்கை அறிவு செயல்களைத் தடுத்துக் கொண்டிருப்பதை நோக்கிச் சகியாமல் சிவன் முதலாவது பேரிரக்கம் கொள்ளுகிற சமயத்தில் அவனோடியைந்து நிற்கிற அருட்சத்தி பராசத்தி என்று கூறப்படுவள். அந்தப் பராசத்தியானவள் முதலாவது உயிர்களுக்கு அருளுதல் மாத்திரம் குறித்துப் பொதுவகையால் அறிவித்தும், அறிந்தும் தடையிலா ஞானமாய் நிற்பள். தடை என்பது ஆணவமலத்தி

னுளதாகிய மறைப்பு. தடைசெய்யாத ஞானம் ஆகிய பராசத்தி உயிர்களினது ஆணவமல வலியைத் தீர்க்க வேண்டும் என எண்ணி உயிர்கட்கு மலபரிபாகம் வருவித்தற் பொருட்டுப் படைத்தல் முதலிய ஐந்தொழில் செய்தலைக் குறித்துச் சிறப்பு வகையால் தனது ஒரு கூற்றான் தொழில் செய்ய நிற்கிற சமயத்தில் திரோதான சத்தி என்று கூறப்படுவள். திரோதான சத்தி, ஆதி சத்தி, மறைப்பாற்றல் என்பன ஒருபொருட் சொற்கள்; பராசத்தி திரோதானசத்தியாய் நின்று உயிரினது ஆணவமலத்தைப் போக்கும் அவாவாய் நிற்கிற சமயத்தில் இச்சாசத்தி என்றும், உயிரினது ஆணவமலத்தைப் போக்கும் வகையை அறிந்து நிற்கிற சமயத்தில் ஞான சத்தி என்றும், உயிரினது ஆணவமலத்தைப் போக்குதற்கு ஆகந்துகமலங்களாகிய திரோத மலம், பிராரத்தவினைமலம், சுத்தமாயாமலம், அசுத்தமாயாமலம் ஆகிய இவைகளை உயிருக்குக் கருவிகளாய்க் கூட்டுவிக்கும் சமயத்தில் கிரியா சத்தி என்றும் கூறப்படுவள். ஆகந்துக மலம் என்பது இடையிலே கூட்டப்படுகிற மலம். இச்சா சத்தி எனினும் வேட்கைவலி அல்லது வேட்கை ஆற்றல் எனினும் பொருந்தும். ஞான சத்தி எனினும் அறிவுவலி அல்லது அறிவாற்றல் எனினும் பொருந்தும். கிரியாசத்தி எனினும் செயல்வலி அல்லது செயலாற்றல் எனினும் பொருந்தும்.

95. மேலே கூறப்பட்ட இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியா சத்திகள் அநாதியே ஆணவமல மறைப்பினால் விளங்காமலிருக்கிற உயிர்கள், அம்மறைப்பினின்று படிமுறையில் சிறிது சிறிதாய் நீங்கி முடிவில் அவை முற்றிலும் விளங்கப் பெற்று வியாபகம் (நிறைவு) உடையவைகளாய் இறைவனது திருவடிப் பேரின்பம் அடையும்படி செய்தலே ஐந்தொழிலின் பயனாகும். பகுத்தறிவுடைய மக்கள் உயிர்கள், தங்கள் பொருட்டு இறைவன் செய்யும் ஐந்தொழிலின் கருத்தை அறிந்து அதற்கு ஏற்ப உலக வாழ்க்கையில் மறத்தை விலக்கி அறவழியில் ஒழுகித் தங்கள் வேட்கை அறிவு செயல்கள் திருந்தும்படி வாழ்தல் உயிர்வளர்ச்சி (Soul evolution) வாழ்வு ஆகும். பார் ஆளும் பெரிய மன்று வாழ்வாயினும், ஊர் ஆளும் சிறிய மன்று வாழ்வாயினும் அவ்வாழ்வுகளெல்லாம் மக்களுக்கு அவர்களுடைய வேட்கை அறிவு செயல்கள் திருத்தமடைதற்கு வேண்டப்படும் பழக்க இடங்களாகும் (Training grounds). வேட்கை அறிவு செயல்களைத் தவிர்த்து மக்களுக்கு எவ்வகை வாழ்வுமில்லை. உயிர் வளர்ச்சிக்குத் தக்கவாறு பலவகை உயிர்களின் உருவங்கள் வளர்தல் உருவ வளர்ச்சியாகும் (Form evolution). மேற்குநாட்டு ஆராய்ச்சியாளர் ஏறக்குறையச் சென்ற நூறு

ஆண்டுகளாக உயிர்களின் உருவ வளர்ச்சியை அறிவாரன்றி உயிர் வளர்ச்சியை அறியார்.

96. நோயினாற் பிணிப்புண்ட ஒருவனுக்கு மருத்துவன் அந்நோயணுகியிருக்கிற உடலில் வைத்து மருந்து கொடுத்துச் சிறிது சிறிதாக நோயின் வலியை நீக்கிக்கொண்டே வந்து நோய் தீர்ந்தபின் நோய் நீங்கின உடலில் வைத்து வலிமருந்து (Tonic) கொடுத்து முழு உடல் நலமடையச் செய்தல் போல, அநாதியாயுள்ள ஆணவமலத்தினால் வேட்கை அறிவு செயல்கள் பிணிப்புண்டிருக்கிற உயிர்களுக்கு ஆணவமலம் சேர்ந்திருக்கிற மாயா உடல்களைக் கொடுத்து அவ்வுடல்களில் வைத்து மல மறைப்பைப் படிமுறையில் சிறிது சிறிதாக நீக்கி மலம் முற்றும் நீங்குகிற சமயத்தில் உயிர்களை ஆண்டருள் செய்து வீட்டின்பம் அருளுகின்றான். முடிவிலே செய்யப்படுகிற அருட்டொழிலுக்குத் திரோதான சத்தியின்வழிச் செய்யப்படுகிற படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களும் ஏதுவாயுள்ளன. இறைவன் உயிர்களுக்கு ஆணவமல அழுக்கை மாயாமல அழுக்கைச் சேர்த்துப் போக்குதல், வண்ணான் ஆடையிலுள்ள அழுக்கை உவர் மண்ணிலுள்ள அழுக்கைச் சேர்த்துப் போக்குதல் போலும். நோய் தீருமளவும் நோயாளிக்கு 'இன்ன செய்க', 'இன்ன செய்யற்க' என்று மருத்துவன் விதிவிலக்குகள் ஆகிய பத்தியம் வைத்தல் போல, இறைவன் மக்களுயிர்களுக்கு மல நோய் நீங்குமளவும் 'இன்ன செய்க' 'இன்ன செய்யற்க' என்னும் அறம்மறங்கள் ஆகிய விதிவிலக்குகளை ஆணை செய்கின்றான். மக்கள் விதிவிலக்குகளைப் பின்பற்றி ஒழுகுங்கால் நல்வினையும் அதனால் வரும் உலக இன்பமும், பின்பற்றாது ஒழுகுங்கால் தீவினையும் அதனால் வரும் துன்பமும் உண்டாகின்றன. நோய் நீங்கின மக்களுக்கு விதிவிலக்குகள் இல்லாதன போல, மலம் நீங்கின மக்களுக்கு விதிவிலக்குகள் இல்லை. மாயை மலமும் வினைமலமும் அநாதியாக உளவாயினும் ஆணவமலம்போல அல்லாது உயிர்களுக்கு இடைக்காலத்தில் கூட்டப்படுதலால் அவை ஆகந்துகமலம் என்று கூறப்படும்.

97. இன்னும் அருட்சத்தியானது தொழில் வேறுபாடுகளால் ஆரணி, செனனி, இரோதயித்திரி என்னும் மூவகைச் சத்திகளாயும் ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி என்னும் ஐவகைச்சத்திகளாயும், நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை சாந்தி சாந்தியதீதை என்னும் ஐவகைச்சத்திகளாயும் வாமை, சேட்டை, இரௌத்திரி காளி, கலவிகரணி, பலவிகரணி பலப்பிரதமனி, சர்வபூத்தமனி என்னும் எண்வகைச் சத்திகளாயும், பரவாகீசுவரி, அபரவாகீசுவரி, மனோன்மணி, மகேசை, உமை, திரு,

வாணி என்னும் ஏழுவகைச் சத்திகளாயும், உன்மனை, சமனை, வியாபினி, சத்தி, நாதாந்தம், நாதம், நிரோதி, அர்த்தசந்திரன், விருத்தி, விடம், அருக்கிசம், மேதை என்னும் பன்னிரண்டு சலைகளாயும் இன்னும் பல்வேறு வகைப்பட்டும் நிற்கும்.

98. இவ்வாறு பல்வேறு வகைப்பட விரிந்த சத்திகளுடன் சேர்ந்த சிவமும் சதாசிவன், மகேசன், அநந்ததேவர், சீகண்டதேவர், உருத்திரன், மால், நான்முகன் முதலாகிய பல்வேறு பெயர்கள்பெற்று நிற்கும். இவ்வகைச்சத்திகட்கு இடமாகிய விந்துவும் சிவதத்துவம் (சுத்தமாயை), வித்தியாதத்துவம் (அசுத்தமாயை), ஆன்மதத்துவம் (பிரகிருதிமாயை) எனப் பல்வேறு வகைப்பட்டு நிற்கும். தத்துவங்கள் ஒவ்வொன்றிலும் உள் வேறுபாடுகளுள் இங்ஙனம் சத்தி வேறுபாடுகளும், சிவ வேறுபாடுகளும், தத்துவவேறுபாடுகளும் ஒன்றோடொன்று சேர்ந்து பிரிப்பின்றி நிற்கும் என அறிக.

99. மேற்கூறப்பட்ட முக்கூற்றுப் பல்வகை வேறுபாடுகளை இறைவன் அமைத்தது எதன் பொருட்டெனின் மலமறைப்பினால் அறியாமையி லுழலு முயிர்கள் கீழேயுள்ள தூலதத்துவங்களிலிருந்து சூக்குமதத்துவங்கள், அதிசூக்கும தத்துவங்கள், பரசூக்கும தத்துவங்கள் வழியில் படிமுறை ஏறி ஏறி அவ்வத்தத்துவங்களில் விளங்கும் வேட்கை அறிவு செயல்களாலுளதாகும், பலவகைப் போகம் நுகர்ந்து முடிவில் தத்துவங்களுக்கு மேலேயுளதாம் சிவபோகம் அடையும் பொருட்டேயாகும். (தொடரும்)

"சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படான்
கண்முதற் புலனாற் காட்சியு மில்லோன் "

—திருவாசகம்.

(He transcends the description of words,
Is not comprehensible by the mind,
Is not visible to the eye and the other senses.)

"O! the depth of the riches, both of the wisdom and knowledge of God, how unsearchable are His judgements, and his ways past finding out! For who hath known the mind of the Lord, or who hath been His councillor."

—*St. Paul.*

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

இந்தியாவும் சாவகமும்

[திருவாளர் S. நடராஜ பிள்ளை B. A.]

(கஅ-ம் பக்கத் தொடர்ச்சி.)

கீழைச் சாவகம்—10, 11, 12, 13, 14, 15-ம் நூற்றாண்டுகள்

10-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கீழைச் சாவகத்திலே முபூசிந்துக் என்பவரின்கீழ் ஒரு வல்லரசு தோன்றியது. இவர் காலத்தில் சுபத்திதந்திரம் என்ற பௌத்தநூல் எழுதப்பட்டது. இவர் கீழைச்சாவகத்தை வலிவுள்ள நாடாக்கினார். பாலி, நடுச்சாவகம், மேற்குச்சாவகம், மலாக்கா முதலிய பக்கத்து நாடுகளை யெல்லாம் வென்றும் தம் நாட்டுடன் சேர்த்துக் கொண்டார். இவர் மக்கள் காலத்தும் இந்நாடு வலி குன்றாது விளங்கிற்று. இவருடைய பேத்திபாய மகேந்திரத்தாவைப் பாலி தேயத்துக் குறுநில மன்னனை உதயணன் என்பாருக்குத் திருமணம் செய்வித்தார்கள். இவ்விருவருக்கும் தோன்றியவர்தாம் பெருமைபெற்ற எர்லங்கராசன் ஆவார். எர்லங்கர் தமது 15-வது ஆண்டில் பகைஞர்க்குப் பயந்து வானகிரிக்காட்டில் கரந்து வாழநேர்ந்தது. இவர் இக்கானில் உறையும் முனிவர்களுடன் வாழ்ந்து வந்தார். தாம் அரசுரிமை யடைந்ததும் தவசிகட்கு ஆசிரமம் அமைப்பதாக வாக்களித்தார். கி. பி. 1035-ல் பகைவரை வென்று அரசுக்கட்டி லேறினர். காவி மொழியில் சிறப்புற்றோங்கும் இலக்கியங்களாய "அருச்சுன விவாகம்", "விராடபர்வம்", "மாபாரதம்", "இராமாயணம்", ஆயவை இவர் காலத்தில் தோன்றியனவாம்.

இம்மன்னர்க்கு இருபுதல்வர் இருந்தனர். கி. பி. 1042-ல் இவர் மறுபடியும் துறவியாயினர். இவருடைய நண்பரான பரதர் என்னும் சித்தர் இவர் மக்களுக்கு இவர் நாட்டைத் தம் தவ வலியால் மேகத்திலிருந்து கொணரப்பட்ட தண்ணீரால் கோடிட்டு இருகூறாகப் பிரித்துக் கொடுத்தார். எனவே, கீழைச் சாவகம், சங்கலம் (Jangala) கேதாம் (Kediri) என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. சங்கலத்தைப்பற்றி ஒன்றும் விரிவாக இதுபோழ்து அறியக்கூடவில்லை.

கேதரம்

கேதரத்தின் புலவர்கள் காவிமொழிக்குச் செய்துள்ள பேருதவியால் இன்றும் சாவகத்து மக்கள் கேதரத்தின் பண்டைச் சிறப்பை நினைந்து நினைந்து இறும்பூ தெய்துகின்றனர்.

கி. பி. 1104-ல் கேதரத்தை வர்ஷஜயன் என்பார் அரசாண்டார். இவருடைய அவைப்புலவரான திரிகுணன் "சுமணசாந்தகம்" "கிருஷ்ணாயனம்" என்னும் இரு நூல்களை இயற்றினர்.

கி. பி 1120-ல் காமேஸ்வரன் பட்டத்திற்கு வந்தார். இவர் சங்கலத்தின் இளவரசியான சந்திரகிரணி என்பாளை மணந்து இருவரும் அரி ஆசனத்தில் ஒன்றாய் அமர்ந்து செங்கோலோச்சினர். இவர்கள் அரும்பெரும் வீரச் செயல்கள் பல புரிந்ததாக இன்றளவும் நம்பப்பட்டு வருகிறது. இவரது அவைப் புலவரான "மூபுதர்மஜ" என்பார் காம தகனத்தை ஓர் இனிய நூலாகக் காவியில் செய்தார்.

கி. பி. 1135—1155 வரை ஜெயபாயன் அரசாண்டார். பென் ஊலூன் என்பார் இவருடைய அவைப்புலவர். பாரத யுத்தத்தையும், ஹரிவம்சத்தையும் இவர் காவியில் செய்தார். பாரதக் கதைகள் மாற்றப்பட்டுக் காவியில் எழுதப்பட்டதுமன்றி பாரத யுத்தம் சாவகத்தில் நடந்ததாயும், அதில் பங்கு எடுத்துக் கொண்டவர்கள் சாவகத்து மன்னர்கள் எனவும் கருதப்பட்டனர். சாவகத்து மன்னர்கள் தாம் மாபாரத வீரர்களின் கொடிவழித் தோன்றல்களெனவும் நம்பலாயினர். ஜெயபாயன் பிற நாட்டுமன்னர்களை வென்று தன் நாட்டைப் பலமுறச் செய்தான். ஜெயபாயன் மறுமுறையும் பிறந்து தங்கள் நாட்டை அன்னியரின் ஆட்சியினின்று மீட்டு நன்மை செய்வானென இன்றும் சாவகத்து மக்கள் நம்புகின்றனர். இத்துடன் கல்கி அவதாரமும், இயேசுவின் இரண்டாவது வருகையும் நோக்கத்தக்கன.

கேதரத்தின் மன்னர் பெருமையும், செல்வாக்கும் ஏனைய நாடுகளில் பரவி யிருந்தது. சீனத்தரசர் இவர்களுக்குத் தூதுக் கூட்டங்களை அனுப்பிப் பெருமைப்படுத்தினர். சாவகத்து மக்கள் அரேபியா, இந்தியா, ஆஃப்ரிக்கா முதலிய நாடுகளுடன் வாணிபஞ் செய்து பொருளீட்டிக் கலை பெருக்கினர். பிற நாடுகளில் சென்று குடியேறியும் வந்தனர்.

கேதரம் 13-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கேன் அருக் என்பவரால் கைப்பற்றப்பட்டது. பராதன், நாகரக்கிருககமா என்னும் காவி மொழியின் இரு பெருங் கதைகளும் கேன் அருக் வரலாற்றை விவரிக்கின்றன.

சிங்கசாரி

கேன் அருக்கைப் பற்றிய சிறு கதைகள் பல வழங்குகின்றன. இவர் பிரமனின் மகனாகவும், திருமாலின் அவதாரமாகவும், சிவனின் உறவினராயும் கருதப்படுகிறார். இவர் மக்கள் செய்யக்கூடாத அரும் பெருஞ் செயல்கள் பல புரிந்ததாகவும் கூறப்படுகிறது. இவரிடத்தில் கெட்ட பழக்கங்கள் பல குடிகொண் டிருந்தன. ஒரு நாள் இவர் ஒரு கூட்டத்தின் நடுவில் இருந்து சூதாடிக்கொண் டிருக்கும்போது ஓர் இந்தியப் பிராமணர் இவரைக் காண வந்தார். இப் பிராமணர் இவருக்கு நெருங்கிய நண்பரானார். இந் நண்பரின் உதவியால் கேதரத்திற்குட்பட்ட சிற்றரசுகளில் ஒன்றாய சிங்கசாரியில் ஓர் அலுவல் கிடைத்தது. இச் சிங்கசாரியின் அரசி டெட்டீஸ் என்பாள் உளங் கவரும் வனப்பு வாய்ந்தவள். அவள் எழில் கென் அருக்கை அவள்பால் இழுத்தது. சிங்கசாரி மன்னன் அயர்ந்த வேளையில் கரவாக உட்சென்று அவனைக் கொன்று கி. பி. 1220-ல் கேன் அருக் சிங்கசாரியின் மன்ன ராயினார்.

சிங்கசாரியின் அரசுக் கட்டி லேறியதும் தம் நிலையை வலுப்படுத்துவதற்கும், மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்கும் பிற நாடுகளின் மேற் படையெடுத்தார். விரைவில் சிங்கசாரியை ஒரு வல்லரசாக்கினார். பிற நாடுகளைத் தம் குடைக் கீழ் கொணர்ந்ததும் தனக்கு "ராஜஸசங் அமூர்வபூமி" என்று பட்டஞ் சூட்டிக்கொண்டார். மனக் கசப்பும், வெறுப்பும் மிக, மக்கள் இவரை கி. பி. 1227-ல் கொலை புரிந்தனர். பெயர் பெற்ற பிரஜனபரமித என்னும் சிலை இவர் காலத்தில் செய்யப்பட்டது.

கென் அருக்குக்குப் பின்னர் நான்கு மன்னர்கள் அரசாண்டனர். நாலாவது மன்னர் கிருதநாகரன் என்பார் 1268—1292 வரை அரசாண்டார். இவர் உண்மையில் ஆண்மை யற்ற கோழை யெனினும் மக்கள் இவரைச் சிவ புத்தர் எனக் கொண்டாடினர். சுமித்திராவிலுள்ள மல்யு என்ற நாட்டின்மேல் படையெடுத்துப் பண்டாரத் (Treasury) திலுள்ள பணத்தை வீணாக்கினார். இத்துடன் நில்லாது, சீன தேசத்து அரசரையும் அவமதித்தார். இவருக்கு விரோதமாய் உள்நாட்டுக் கலகங்களும் கிளம்பின. கேதரத்தின் சிற்றரசராய் இருந்த ஜயடாங் என்பார் இச் சமயத்தில் பெரும் படையுடன் சிங்கசாரியை எதிர்த்தார். கிருதநாகரன் ஜயடாங்கை எதிர்க்க வழி யில்லாது விழித்தா ரெனினும் இவரின் மருமகனான ராதன் விஜயன் என்பார் ஒரு சிறு படையுடன் கடும் போர் புரிந்தார். போரிற் பின்னிட நேர்ந்ததும் அவர் பக்கத்தி

ளுள்ள மதுரை என்னும் தீவில் ஒளிந்து கொண்டார். கிருத நாகரர் போரில் கொல்லப் பட்டார். இவருடன் சிங்கசாரியின் ஆதிக்கம் ஒழிந்தது.

பதிற்றுப்பத்து விளக்கம்

[பண்டித. திரு. அ. நடராஜ பிள்ளையவர்கள்]

(௧௨-ம் சிலம்பு, ௨-ம் பரல், ௬௪-ம் பக்கத் தொடர்ச்சி)

துயிலின் பாயல்

விருத்தியுரை

தோன்றல் - அண்மை விளி. உறழ்ந்து - உறழ எனச் செய வென் எச்சமாக்குக. விலங்கல், அமிழ்து - உவமையாகு பெயர்கள். புனிற்று மகள் பூணும் ஐயவி - வெண் சிறுகடுகு. இதனை அக்காலத்தில் ஈன்றணிமையினையுடைய பெண்மகளிர் கடிப்பகையாக அணிவது மரபு. பகைவர் படையாற் கோட்டை மதில் சூழப்பட்ட காலத்தே வேண்டியவற்றை விளைத்துக் கோடற்குத் தகுதியாக வயலுங் குளமுங்கொண்ட இடைமதில்கள் அமைக்கப்பட்டிருந்தன. அசைநடை - வினைத்தொகை யன்மொழி. உள்ளலும் - உம்மை எதிர்மறை; இறந்தது தழுவியது. தா - கெட்டித்தன்மை : செப்பு முதலியவற்றின் கலப்பாலுண்டாவது. இன்று - இன்றாக எனத் திரிக்க. அகலத்து - அத்து அல்வழிச் சாரியை. அகலப் பாயல் - இரு பெயரொட்டு. உய்யுமோ - ஓகாரம் எதிர்மறைப் பொருள் கொண்டது. இஞ்சியினையும், விலங்கலினையும், மதிலினையுமுடைய கோட்டை எனக் கூட்டுக. இது, பகைப்புலத்தே நீட்டித்த தலைவனை நோக்கிக் கூறிய பாணன் கூற்று. சேரனது மார்பு அவனது காதன் மகளிர்க்குப் படுக்கையாம் என்ற சிறப்புக் கருதி இப் பாட்டிற்கு, 'துயிலின் பாயல்,' என்ற பெயர் கொடுக்கப்பட்டது. இதனால், சேரனது வென்றிச் சிறப்பும், குலமகளிரோடு கூடிவாழும் வாழ்க்கைச் சிறப்பும் கூறப்பட்டன.

புதிய நடை

தோற்றமிக்க அரசனே! நீ இப்படை வீட்டினில் நீட்டித்துத் தங்கி விட்டாய்! தலைவியைப் பிரியும் அமயத்துக் குறிப்பிட்டு வந்த காலங் கடந்து விட்டது! ஆகலின், நின்னைக் கண்டு தலைவியின் நிலையினைக் கூறுவதற்காக யான் இங்கு வந்தனன். இப்படை வீடு, மதநீர் வழியப் பெற்று, கொடிய கோபம்

மிகுந்து, மரங்களை வேருடன் கிளப்பி வீழ்த்தும் இனிமையான களிறுகள் பிளிறிக் கொண்டிருக்கும் பெற்றியதாய் இருக்கின்றது! அக் களிறுகள் பகைவரின் கோட்டையின் கண்ணுள்ள நன்கு அழகுபெற இயற்றிய பெரிய கதவினை யுடைத்து, அழிக்கும் ஆற்றலமைந்த கருவியாகிய நுனிப்பாகஞ் சிதைந்துள்ள கொம்புகளோடு கூடி விளங்குகின்றன. அக் கோட்டையோ மலையுள்ள விடங்களில் அம்மலை தானே அரணாகவும், மலையில்லாத விடங்களில் மதில் அரணாகவும் மலையோடு மாறுடும்படியாகக் கட்டப்பட்டதும், வளைந்து கூர்ந்து நோக்கும் இரு கண்களைப் போன்ற தோற்றத்தினைக் கொண்ட வாயிலோடு கூடியதுமான புறமதிலையுடையது; நாட்டினைக் கண்டாற் போன்று வயல்களுங் குளங்களு மிக்கு, அம்புக் கட்டுகள் நிறைந்த மலைபோன்ற இடை மதிலையு முடையது; கடக்க முயல்வாரைச் சாவச் செய்யும் கழுக்கோலாக நாட்டிய மரக்கூட்டங்கள் நெருங்கப் பெற்றதும், ஈன்றணிமை கொண்ட பெண்டிர் அணியாத ஐயவியாகிய துலா மரம் கதவிற்குக் காவலாக வாயிலின் உட்புறத்திலே தூக்கி விடப்பட்டதுமான உண்மதிலையு முடையதாம்.

நினது தலைவி நின்றாற் குறிக்கப்பட்ட கால அளவு வரை நின்னேவற்படியே ஆற்றி யிருந்தனள்; கால நீட்டித்தமையான் இப்பொழுது நின்னை நினைத்து வருந்துதற்கு முரியளாயினள். அவள் அமைதியாகிய ஒழுக்கத்தினை மேற்கொள்ளுதற்குக் காரணமான கல்வியினை யுடையாள்; அடக்க குணத்தான் மிகுந்த அழகி; ஊடற் காலத்திலும் இன்பமாய கருத்துக்களையெடுத்துக் காட்டும் இனிய பற்களைக் கொண்டவள்; அமிழ்து போன்ற மொழிகள் நிறைந்த பவளவாயினள்; ஆராய்வுகள் பலவற்றை யடக்கிய அரிய நோக்கினள்; பிறைபோன்ற நெற்றியள்; அன்னம் போன்று அசைந்த நடையள்.

திருமகள் எழுந்தருளியுள்ள நினது திருமார்பு குலமகளிராகிய நினது காதலியர் கண்ணுறங்குதற் கினிய படுக்கையாகப் பரந்துள்ளது. அதன்கண் நின்னை எதிர்த்த எழு அரசர்களின் முடிகளாலாகிய மாலை முதன்மை கொண்டு விளங்குகின்றது. அம்முடிமாலையுடன், செம்பு முதலியவற்றின் சேர்க்கை விட்டு, நெகிழ்ந்த நிலையினுனே அழகிய மணிகளுடன் சேர்க்கப்பட்டுப் பலவித அணிகள் இயற்றுதற்குத் தகுதியாக ஓட்டற்ற ஒளியுடைய கிளிச்சிறைப் பொன், விளங்குகின்ற சுடர்க் கொடிகளையுடைய வயிர மணிகளுடன் கூடி மாறுபட்டு ஒளியினை வீசும் பூண்கள் பொலிந்துள்ளன.

இங்ஙனஞ் சிறந்த நினது காதலியர் படுக்கையாகிய மார்பினைப் போர் காரணமாக வேற்றுப் புலஞ்செல்ல வேண்டாக்

காலத்து அவர்க்குப் பகுத்துக் கொடுத்தலினும், வேற்றுப் புலஞ் செல்ல வேண்டிய காலத்து அதனை அவர்பாலிருந்து வாங்கிச் செல்லுதலினும் வல்லவனே! நினது மார்பு தலைவியை மிகவும் வருத்தா நின்றது. அவள் இனி, தனிமையான படுக்கையிடத்தே தங்குதலைப் பொறாள். ஆகலின், அன்பு கூர்ந்து அவள் பால் வந்து அருள் புரிவாயாக!

(7) வலம்படு வியன்பணை

(௧௭) பாட்டு

புரைவது நினைப்பிற் புரைவதோ வின்றே
பெரிய தப்புந ராயினும் பகைவர்
பணிந்துதிறை பகரக் கொள்ளுநை யாதலிற்
றுளங்குபிசி ருடைய மாக்கட னீக்கிக்
கடம்பறுத் தியற்றிய **வலம்படு வியன்பணை**
யாடுநர் பெயர்ந்துவந் தரும்பலி தூஉய்க்
கடிப்புக் கண்ணுறூஉந் தொடித்தோ ளியவ
ரரணங் காணாது மாதிரந் துழைஇய
நனந்தலைப் பஞ்ஞிலம் வருகவிந் நிழலென
ஞாயிறு புகன்ற தீதுதீர் சிறப்பி
னமிழ்துதிகழ் கருவிய கணமழை தலைஇக்
கடுங்கால் கொட்டு நன்பெரும் பரப்பின்
விசும்புதோய் வெண்குடை நுவலும்
பசும்பூண் மார்ப பாடினி வேந்தே.

பதவுரை

துளங்கு - ஆடுகின்ற, பிசிர் உடைய - துளிகளைக்கொண்ட, மா கடல் - பெரிய கடலை, நீக்கி - விலக்கிச் (கடந்து) சென்று, கடம்பு - எதிரிகளின் காவல் மரமாகிய கடப்ப மரத்தினை, அறுத்து - வெட்டி, இயற்றிய - உண்டாக்கிய, வலம் - வெற்றியானது, படு - போர் செய்து வருந்தாமலே பகைவர் வெருவியோடும்படி முழங்குதலால் தோன்றும்படியான, வியன் - பெரிய, பணை - முரச வாத்தியத்தை, ஆடுநர் - ஆடிக்கொண்டே, பெயர்ந்து வந்து - நடந்து சென்று, அரும்பலி - அருமையான பலிகளை, தூய் - கொடுத்து, கடிப்பு - கோல்களாலே, கண் உறும் - அடித்தொலிக்கும்படியான, தொடி - வளையல்களணிந்த, தோள் - புயங்களையுடைய, இயவர் - வாச்சியக்காரர்கள், (ஆடுகின்ற துளிகள் = அலை.)

அரணம் - பாதுகாவலாகிய இடம், காணாது - கிடைக்கப் பெறாது, மாதிரம் - எட்டுத் திக்குகளிலும் சென்று, துழைஇய - துருவிக்கொண்டு திரிகின்ற, நனந்தலை - பரந்த வுலகத்தே யுள்ள, பஞ்ஞிலம் - மக்கட் கூட்டத்திற்கு, இந்நிழல் - பாதுகாவலாகிய எமது அரசன் குடைநிழலின் கீழே, வருக என - வருவீர்களாக என்று, ஞாயிறு - சூரியன், புகன்ற - வெளிவிட்ட, தீது - வெப்பமாகிய கொடுமையினை தீர் - விலக்கும்படியான, சிறப்பின் - மேன்மையினையும், அமிழ்து - தேவாமிர்தினைப் போன்ற செயலினைக் கொண்ட நீரினையும், திகழ் - கொண்டு விளங்காநின்ற, கருவிய - தொடர்ச்சியான, கணமழை - மிகுந்த மழை, தலைஇ - பெய்து (பின்பு), கடுங்கால் - கொடுங்காற்று, கொட்கும் - வீசும்படியான, நன்பெரும் - மிகப் பெரிய, பரப்பின் - வெளியினைக் கொண்ட, விசும்பு - ஆகாயத்திடத்தே, தோய் - பொருந்தி விளங்கும்படியான, வெண்குடை - நினது வெண்கொற்றக் குடையின் அருட்சிறப்பை நுவலும் - எடுத்துச் சொல்லுதற்குக் காரணமான, பசும்பூண் - பசிய பொன்னாலும் மணிகளாலும் செய்யப்பட்ட ஆபரணங்களை யணிந்த, மார்ப - மார்பினை யுடையவனே, பாடினி - பாடிப்புகழும் விறலியர்களை, வேந்தே - ஆதரிக்கும் அரசனே! நினக்கு - உனக்கு, புரைவது - குற்றங்களைக் கொடுக்கக்கூடியதன்மை, நினைப்பின் - ஏதேனுமுண்டோ என்று ஆராயின், பகைவர் - நினது எதிரிகள், பெரிய - கொடிய தவறுகளை, தப்புநராயினும் - செய்திருந்தாரானாலும், பணிந்து அவர்கள் கீழ்ப்படிந்து, திறைபகர - கப்பங் கொடுத்தவளவிலே, கொள்ளுநை - மன்னித்து ஏற்றுக் கொள்கின்றாய், ஆதலின் - ஆகையால், புரைவது - குற்றங்களைக் கொடுக்கக் கூடிய தன்மை, இன்று - யாதுமில்லை. ஏ-அசைநிலை.

விருத்தியுரை

ஆடுநர் - முற்றெச்சம். தூஉய் - சொல்லிசை யளபெடை; கண்ணுறூஉம் - இன்னிசையளபெடை. கண்ணுறல் - முரசின் கட் பாகத்தே (கடிப்பு) பொருந்துதல்; அஃதாவது அடித்தல். துழைஇய - சொல்லிசையளபெடை. பஞ்ஞிலம் - மக்கட் கூட்டம். மழைநீர் அதன் சிறப்புக் கருதி அமிழ்து எனப்பட்டது. இதனை, "வானின்றுலகம் வழங்கி வருதலாற், றானமிழ்த மென்றுணரற் பாற்று," என்ற குறளா லுணர்க. கருவி - தொடர்பு. சேர நாடாகிய மலையாளத்தில் இக்காலத்தும் ஆண்டின் தொடக்கத்திற் பெருமழை தொடர்ந்து பெய்து, பின்பு கொடுங்காற்று வீசுதலை, "கருவிய கணமழை தலைஇக் கடுங்கால் கொட்கும்," என்ற அடிகளின் பொருளோடு கூட்டி நோக்குக. கொள்ளுநை - முன்னிலை யொருமைவினைமுற்று; விகுதி ஐகாரம் நகர வொற்றோடு கூடிவரல் அக்காலவழக்கு. இயவர் பஞ்ஞிலம் இந்நிழல் வருக என வெண்குடை நுவலும் மார்ப! எனக் கூட்டுக. இத

ஞல், சேரனது வெற்றியும் பொறுமையும் விளக்கப்பட்டன. இதில் சேரனது முரச வாத்தியம் வீரர் போர் செய்து வருந்தா வண்ணம் பகைவர் வெருவி யோடும்படி முழங்கி அரசனுக்கு வெற்றியை யுண்டாக்கும் என்று சிறப்பித்தபடியால் இதற்கு வலம்படு வியன்பணை என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

புதிய நடை

பசும் பொன்ஞலும், பசிய மணிகளாலுஞ் செய்யப்பட்ட பணிகளை அணிந்துள்ள பரந்த மார்பனே! பாடிப் புகழும் விறலியர்களைப் பாதுகாக்கும் பண்புடைய வேந்தனே! வளைய லணிந்த தோள்களையுடைய நினது வாய்ச்சியக்காரர்கள் ஆடிக் கொண்டே நடந்து சென்றனர்; நினது பெரிய முரசிற்கு அருமையான பலிகளைக் கொடுத்தனர்; கோல்களாலே அதனை அடித்து முழக்கினர். அது வீரர்கள் போர் செய்து வருந்தாமலே பகைவர்களை வெருவியோடும்படி முழங்கியது. அவ் வளவில், உனது படைகள் அலைகள் நிறைந்த பெருங் கடலைக் கடந்து சென்று, பகைவர்களின் காவன்மரமாகிய கடம்பினை வெட்டி வெற்றியை உண்டாக்கின.

பாதுகாவலாகிய அரசாட்சியை நாடி, எட்டுத் திக்கிலுஞ் சென்று திரிந்து கொண்டிருந்த பரந்த உலகத்தேயுள்ள மக்கட் பரப்பிற்கு அவ்வாய்ச்சியக்காரர்கள், "பாதுகாவலாகிய எமது அரசன் குடைநிழலின் கீழே வருவீர்களாக." என்று உனது வெண்கொற்றக் குடையின் அருட் சிறப்பை விளக்கிக் கூறினர். நினது வெண்கொற்றக் குடையோ, மிகப் பெரிய வெளியினைக் கொண்ட விண்ணகத்தே நின்று விளங்கும் மேன்மையினையுடைய தாம். அவ் விண்ணகமோ முதலிற் பெருமழை பெய்து, பின்பு, கொடுங்காற்று வீசப்பெறுங் குணமுடையதாம். அப் பெரு மழையோ, வெய்யோன் வெளிவிட்ட வெப்பமாகிய கொடுமை யினை விலக்கும் மேன்மையினையும், அமிழ்தினைப் போன்று உயிர்களைக் காக்கும் அருஞ்செயல் கொண்ட நீரினையும், தொடர்ச்சியாகப் பெய்யும் தொன்மையினையு முடையதாம்.

நின்னிடத்திற் குற்றங்களை யுண்டாக்கக் கூடிய கொடுங் குணம் யாதேனுமுண்டோ என்று ஆராயின், நினது பகைவர்கள் பெருங் குற்றங்களைச் செய்திருந்தனராஞலும், அவர்கள் நினக் குக் கீழ்ப்படிந்து திறை கட்டிய வளவிலே, நீ அவர்களை மன் னித்து ஏற்றுக் கொள்கின்ருய். ஆகலின் நின்னிடத்தில் குற்றங் களை யுண்டாக்குங் கொடுங்குணம் யாதுமில்லையாம்.

(தொடரும்)

வரலாற்றுப் பகுதி : History & Biography

இத்தாலிய தேயப் பழங்குடிகள்

[பருத்தித்துறை திரு. த. இராமநாத பிள்ளை, B.A., (Lond.)]

இரண்டாம் அதிகாரம்

உரோமாபுரத்தின் ஆதி வரலாறு

இரைபர் நதி முகத்துவாரத்தில்நின்று பதினறு மைல் தூரத்தில் அந்நதிக்கரையில் எழுகுன்றுகள் உண்டு. அக்குன்று கண்மிசை அமைக்கப்பட்ட காவலரண் உரோமாபுரமாகும். ஏழுகுன்றுகளையும் இக்காலத்திற் காணவியலாது. குன்றுகளுட் சில தீ, வளி, நீர், முதலிய இயல்பேதுக்களால் அழிவெய்தி யிருக்கக்கூடும். உரோமர் தம் உற்பத்தி வரலாற்றை மறந்து சில பழங்கதைகளை நம்பி அவற்றினைத் தம் வரலாறெனெ எழுதி வைத்தனர். உரோமரது ஆதி வரலாறு வேர்சிலியஸ் எழுதிய காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. வேர்சிலியஸ், அகஸ்தஸ் தனிக்கோலனின் அரசவை வித்துவானுகையால், அகஸ்தஸ் தேவ வம்சம் என நாட்டுதற்காக ஏனியாஸ் என்னும் உரோஜ தலைவனின் சந்ததியில் தோற்றினுனெனப் புகழ்ந்து ஏனீட் என்னும் இதிகாசத்தைப் பாடினுன். உரோமா புரத்தின் ஆதி வரலாற்றை ஏனீட் இதிகாச வரலாற்றைச் சார்ந்து கூறுதும்.

கிரேக்க மன்னர்களுள் துலங்கிய அக மன்னனுக்கு மெனி லேயஸ் என ஒரு உடன்பிறந்தான் இருந்தான். அவன் மனைவி தான் மானிடப் பெண்களுள் அழகிற் சிறந்த எலன் என்ப வள். அப் பெண்ணை ரோஜமாநகரத்து இளங்கோ பாரிஸ் கவர்ந்து சென்றனன். முதற் கடவுள் யூப்பிற்றரின் தேவி யூனேவும், கலைமகள் மினேர்வாவும், வீனஸ் என்னும் காம தேவதையும் தம்முள் யார் அழகு வாய்ந்தவரெனப் பாரிஸ் என்பவனிடம் கேட்க அவன் மூவருள் காமதேவதையே அழகிற் சிறந்தவளெனத் தீர்த்தான். அக்காம தேவதையின் நன்கொடை யாக அவளைப் பாரிஸ் பெற்ருன். கிரேக்க தலைவர் யாவரும் யுத்தத்திற்கு ஆரவாரித்தனர். அவ்யுத்தவரலாற்றை கிரேக்க இதிகாச மாகிய இலியட் என்னும் நூலில் வாசிக்கலாம். அக மன்னன் தானைகளைப் படகேற்றிக் கடல் கடத்தற்குச் சாந்தியாக ஒரு தலைவனின் தனிக் குமரி ஒருத்தியைப் பலியிட்டுச் சின்ஞசி

யாக்கரை சேர்ந்து பேர்காமம் என்னு ரோஜமா நகரைச் சூழ்ந்தான். கிரேக்கரும் உரோஜரும் பத்து ஆண்டுகள் பொருதனர். ரோஜதலைவன் கெக்ரரைக் கிரேக்க வீரன் அக்கிலீஸ் கொன்ருனாயினும், கெக்ரரின் தம்பிமார் பாரிஸ் முதலிய நாற்பத்தொன்பதின்மர் போரை நடாத்தினுர்கள். கிரேக்கர் ரோஜமா நகரத்தைக் கைப்பற்ற இயலாது கலங்கினர். பத்தாம் ஆண்டு ஒடிசியஸ் என்னும் கிரேக்கவீரன் நகருட்புக ஓர் உபாயங் கூறினுன். ஒரு மரக்குதிரை செய்து அதனுள் வீரர் பலரை அடைத்து விட்டுக் கிரேக்கர் வீடு பேர்வார்போலக் கப்பலேறிப் பாய்விரித்து அகன்றனர். ரோஜரில் ஒரு சாரார் பகைவருடைய குதிரையைத் தொட்டாலும் கேடுவிளையும் என்றனர்; ஒரு சாரார் குதிரையை நகருட் செலுத்தின் தமது வெற்றிக்கு அடையாளமாகுமெனக் கிளந்தனர். பகைவர் தம் நாடேகினர் என்றெண்ணி உரோஜர் குதிரையை நகருள் இழுத்து வெற்றிவிழாக் கொண்டாடினுர்கள். அன்றிரவு உரோஜர் இனிது உறங்க எண்ணினர். குதிரையினுள் இருந்த கிரேக்க வீரர் நள்ளிருள் யாமத்தில் வெளிவந்து கணையமரத்தை நீக்கி நகரவாயிலைத் திறந்து மரக்கலத்தில் ஏகிய வீரரை உள்ளேற்று நகரவீதிகள் தோறுஞ்சென்று உரோசரைக் கொன்று நகருக்குத் தீயிட்டு அழித்தனர். பாரிஸ் இறந்தபின் அவன் சகோதரர் சிலரொடு கூடிவாழ்ந்த எலனை மெனிலேயஸ் திரும்பவும் மனைவியாக ஏற்ருன். நகர் எரிய உரோஜ வீரர் சிலர் தப்பி ஓடினர். ஏனியாஸ் என்னும் உரோஜ வீரன் தனது தந்தை அன்கயிசைத் தோளி லிட்டுத் தன் சுற்றத்தாரோடு கப்பலேறி புது நாடுகளைத் தேடி அலைந்தான். வீனஸ் என்னுங் காமதேவதை ஏனியாஸ் வீரனின் தாயாகையால் அவனுக்கு இத்தாலியா தேசத்தை அளிக்கும்படி யூப்பிற்றரிடம் வரம்கேட்டுப் பெற்றனள். யூனே தன் செறுநரை அழித்தற்கெண்ணி வாயுதேவனுகிய ஏயோலனது உதவியால் ஒரு புயல் எழுப்பி, உரோஜருக்கு இடுக்கண் விளைத்தனள். சமுத்திரதேவன் நெப்ட்யூன் (Neptune) தனது கடலில் பிறர் அதிகாரம் செலுத்துவதைக் கண்டு வெகுண்டு சூலாயுதத்தால் அடித்துத் திரை கடலை அடக்கினுன். இவ்வண்ணம் ஏனியாஸ் பலகாலம் அலைந்து ஆபிரிக்காக் கரையில் ஏற்றுண்டான். ஏனியாஸ் காதாக்கா என்னும் பட்டினத்தில் இறங்கி இராணி டைடோவின் முன்றில் அடைந்து தன் வரலாற்றைச் செப்பினன். டைடோ அவனை உபசரித்து மோகித்தாளாக, அவன் அவளொடு சில காலங் கழித்தான். பின்னர், தாயின் கட்டளையால் தலைவியைப் பிரிந்து தனக்கு வாக்களிக்கப்பட்ட இத்தாலியா தேசத்திற்குப் புறப்பட்டான். ஏனியாஸ் பிரிந்ததை டைடோ அறிந்து ஆற்ருளாகித் தீப்பாய்ந்தாள். ஏனியாஸ்

இத்தாலியாக் கரை அடைந்து இலத்தின் நாட்டில் இறங்கி லெவினியஸ் மன்னனுல் உபசரிக்கப்பட்டு, அவன் மகள் லெவினியாவை மணம் புரிந்தான். லெவினியாவைக் காதலித்த ரேணஸ் ஏனியாசோடு பொருது தோற்ருன். ரேணஸ் இரண்டாம் முறையும் ஏனியாசோடு யுத்தஞ் செய்தனென்றும் அவ் யுத்தத்தில் ஏனியாஸ் மறைந்தனென்றுந் தெரிகிறது. ஏனியாஸ் கீழுலகு சென்று தன் முற்சந்ததியாரையும் உரோஜ யுத்தத்தில் இறந்த வீரரையும் தனது பிற்சந்ததியாராகும் உரோமரையும் கண்டு மகிழ்ந்த முறையாகப் புலவன் வேர்சிலியஸ் அகஸ்தஸை முகமன் கூறி அகஸ்தஸ் ஏனியாசின் வம்சத்தவன் என நாட்டினுன். உரோமர் நரகமுண்டென நம்பினரென்றும் பாவஞ் செய்தோர் கல்லுருட்டல், சில்லிற் சுழல்தல், நெருப்பில் எரிதல் முதலிய தண்டனைக்குட்படுவரென நம்பினர் என்றும் ஏனிட் இதிகாசத்தாற் புலப்படுகிறது. இத் தண்டனைகளை வேர்சிலியஸ் நன்கு வருணிக்கின்றனர். இது நிற்க.

ஏனியாஸ் மகன் அஸ்கானியாஸ் லவினியம் நகரை அரசாண்டு, பின்னர், அல்பா லோங்கா என்னும் புது நகரொன்றை அமைத்தான். ஏனியாஸின் பன்னிரண்டாந் தலைமுறையாகத் தோன்றிய புரூக்கஸ் அல்பாலோங்காவில் ஆணை செலுத்தினுன். அவன் மக்கள் நூமிற்றர் அனுலன் என்னும் இருவர் தம்முள் முரண்பட்டு, மூத்தோன் மகளாகிய றேயா சில்வியாவை இளையோனுகிய அனுலன் வெஸ்தாத்தேவியின் சேவைப் பெண்ணுக்கினுன். தேவராட்டிகள் கன்னியராக நிறைகாத்தல் மரபாயினும், அப் பெண் போர்க்கடவுள் மார்ஸ் என்போனுக்கு இரட்டைக் குழந்தைகளைப் பயந்தாள். அக் குற்றத்திற்காக அவளை அனுலன் கொல்வித்தான். அவளீன்ற இரட்டைக் குழந்தைகளை ஒரு தொட்டிலில் வைத்து இரைபர் நதியிலிட்டான். பலற்றையின் குன்றில் அத்தொட்டில் கரைசேர, தன் குட்டிகளை இழந்த ஓநாயொன்று அக்குழவிகளைப் பாலூட்டி வளர்த்தது. ஓநாய் முலைகொடுத்த விநோதத்தைக் கண்ட இடையன் ஒருவன் அக் குழந்தைகளை தானெடுத்துச் சென்று உரோமியுலுஸ் உரேமுஸ் எனப் பெயரிட்டு வளர்த்தான். அவ்விருவரும் வலிய இடையராகிக் களவுக் குற்றஞ் சாட்டப் பெற்றனராய் நூமிற்றர் முன்னிலையில் நின்றனராக, அவர்களை அவன் தன் பேரப்பிள்ளைகளென அறிந்தான். பின்பு உரோமியுலுஸ், உரேமுஸ் என்போர் அனுலனைக் கொன்று தம் பாட்டனுக்கு அரசுரிமை அளித்தனர். உரோமுயுலுஸ் என்போனும் அல்பாலோங்காவை நீங்கிப் புதிய நகரொன்றைத் தாம் வளர்ந்த இடத்தில் அமைக்க நினைந்து முழுத்தம் பார்த்து நின்றுழி உரேமுஸ் ஆறு பிணந்தின்னிப் பறவைகளையும் உரோமுயுலுஸ் பன்னி

ரண்டு பறவைகளையும் கண்டனராகையால் உரோமுலுஸ் தேவரிடம் அனுமதி பெற்றான். ஒரு சிறு நகரைப் பலற்றையின் குன்றில் அமைத்து நிலவரணைக் கட்டினான். உரேமுஸ் அப் புரிசையை நிந்தித்துக் கடந்தமையால் உடன்பிறந்தோனால் கொல்லப்பட்டான். உரோமாபுரம் கட்டப்பட்டது கி. மு. 753 என்ப. உரோமர் அவ்வாண்டை முதலாண்டாகக் கொண்டனர். இனி அல்போலோங்காவிலிருந்தும் குடிகள் சிலரை உரோமுலுஸ் குடியேற்றியும் நகருக்குச் சனங்கள் போதாமையால் வேந்தரணைக் கமையாத கள்வர் மறவர் முதலியோர்க்கு தமது நகரம் ஏமவரணாகுமென உரோமுலுஸ் பறைசாற்றிக் குடிகளைப் பெற்றான். அவர்களுக்குப் பெண்கள் இல்லாமையால் கவன்றான். தீயோருக்கு சபீனியர் பெண் கொடுக்க மறுத்தனராதலின் உரோமுலுஸ் பெண்களை யெடுத்தற்கு ஓர் உபாயம் ஆலோசிப்பானாயினான். கொன்சஸ் என்னும் தெய்வத்திற்கு விழா நடத்துவேமென உரோமுலுஸ் சபீனியரை அழைக்க, அவர்கள் தம் மகளிரொடு வந்தார்கள். விழா நடந்துழி பெண் வேண்டினோர் தாம் விரும்பிய பெண்களை இராக்கத முறையாக மணஞ் செய்தனர். இவ்வண்ணம் மகளிரை இழந்த பெற்றோர் தமது அரசன் ரையிற்றஸ் றேற்றியனுக்கு முறையிட்டனர். கயினியர் கிறீஸ்த்துமேனியர் அந்தெணயி என்னும் சபீனிய சாதிகள், ரோமரொடு பொருது தோற்றனராக, ரையிற்றஸ் ரேற்றியன் சேனையொடு சென்று ரோமா நகரத்தைச் சூழ்ந்து நின்றான். உண்ணகர் ஸ்பூறியஸ் இராறிப்பஸ் என்பவனின் காவலில் இருந்ததென்றும் அவன் மகள் சபீனியர் இடக்கையிலணிந்த பொன்னணிகளை விழைந்து அரண்வாயிலைக் காட்ட பகைவர் நுழைந்து நன்றியாகத் தமது இடக்கைப் பரிசங்களால் அவளை இடித்துக் கொன்றனரென்றும் ஒரு கட்டுரை உண்டு; இனி, சபீனியர்க்கும் உரோமருக்கும் போர் நடந்துழி உரோமர் தோல்வியடையுஞ் சமயத்தில் வதுவைகள் போர்க்களத்துக்குச் சென்று தம் கணவர்க்கும் பிதாக்களுக்கும் இடையில் நின்று குலைந்த கூந்தலராய் நீர் உகுத்த கண்ணினராய்த் தம் பால்வாய்க் குழந்தைகளை யேந்திக் கைநீட்டிச் சமாதானம் இரந்து பெற்றனரென வேறோர் இனிய கதையுண்டு. சபீனியர் சிலர் உரோமா நகரத்தில் குடியேறினார்களென்றும் ரைற்றஸ் மரித்தபின் உரோமுலுஸ் இரு சாதிக்கும் வேந்தனானானென்றும் ஒரு கடும் புயலில் மறைந்தானென்றும் ஒரு கோயில் அவனுக்கு அமைக்கப்பட்டதென்றும் பழங்கதை செப்பும்.

இனி உரோமுலுஸ் உரோமரை மேன் மக்கள் கீழ் மக்களாகப் பிரித்தனனெனவும், மேன்மக்களை இராமினிஸ் திக்திஸ் இலுக்குறீஸ் என மூன்று சாதிகளாக வகுத்தனனெனவும், ஒவ்வொரு சாதியையும் பத்தினங்களாகவும் ஒவ்வொரு இனத்தையும் பத்துக் குழூக்களாகவும் ஒவ்வொரு குழூவையும் பத்துக் குடும்பங்களாகவும் வகுத்தான் எனவும் பழங்கதை கூறு மாதலின், உரோமாபுரம் மூன்று சாதிகளையும் முப்பது இனங்களையும் முந்நூறு குழூக்களையும் 3,000 குடும்பங்களையும் உடையதாயிற்று. இக் குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட முதியோரே மேன்மக்கட் சபையங்கத்தினராதற்கு உரிமை யுடையோர். 3000 காற்படையும் 300 குதிரைப்படையும் இக்குடும்பங்களினின்று தெரியப்பட்டன. அவை மூன்று கூட்டம் சேனையாயின. கீழ்மக்களை இங்ஙனம் வகுக்கவில்லை. இஃதெல்லாம் புனைந்துரை என்பது வெளிப்படை. உரோமெனப் பெயர் வந்தமைக்குக் காரணந் தெரியாமையால் உரோம் என்னும் பதத்திற்கு ஊலுஸ் விகுதி கொடுத்து உரோமுலுஸ் என்போனின் பேரால் நகருக்கு நாம கரணஞ் செய்யப் பட்டதென மொழிந்தனர் போலும். இலத்தின் மொழியில் பெயர்ச் சொற்கள் ஊலுஸ் என்னும் பகுதிப் பொருள் விகுதி பெற்று வேறு பெயர்ச்சொற்களாதல் இலக்கணமுறை யென்பது உணரற் பாலது. இனிக் கீழ்மக்களுக்கு உரிமைகளை மறுத்தற்காகத் தொன்றுதொட்டே கீழ்மக்கள் கீழ்மக்களாய் உரிமை களில்லாதவர்களாய் இருந்தனரென வற்புறுத்தினர். அங்ஙனம் வற்புறுத்துதற்கு உரோமுலுஸ் அங்ஙனம் வகுத்தனரென மேன் மக்கள் கட்டுரை செய்தனர் என்பதும் பொருந்தும். (தொடரும்)

மாணிக்கவாசகர் குலம்

"குரு:—அவர் (மாணிக்கவாசகர்) குலம் **ஆமாத்திய** ரென்னும் ஓர்வகை அந்தணர் குலமென்று கூறப்பட்டிருக்கின்றது.

சீடன்:—ஆமாத்தியர் என்னும் மொழி வடமொழி யாதலின், அம் மொழிக்கு மந்திரிகளென்று வடமொழிப் பண்டிதர்கள் பொருள் கூறுகின்றனர். எனவே அம்மொழி, எமது மணிவாசகப் பெருமான் அமைச்சுரிமை பூண்டிருந்தமையை விளக்குமேயன்றி அவர் குலத்தை விளக்கமாட்டாது. மேலும், அந்தணருக்குள் ஸ்மார்த்தரென்றும், ஆதிசைவரென்றும், நம்பூரியரென்றும் **ஆராத்திய**ரென்றும் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன."

—மணிவாசகப் பெருமான் வரலாற்று வினாவிடை.

ஆராத்தியன்—ஜங்கம் என்ற இலிங்காயத பிராமணர்களின் வகுப்புப் பெயர். அவர் ஏனைய பிராமண வகுப்பாருடனும் கொள்வனை கொடுப்பனை செய்வதில்லை. ஆனால் சில உயர்குல மக்களுக்குக் குருவாகவும் ஆசாரியராகவும் இருந்து வந்தனர். மகாதேவனை இலிங்கவடிவிற் பணிந்து பிராமண ஆசாரங்களை யனுஷ்டித்து காயத்திரி மந்திரத்தைச் செபித்து வந்தார்கள்.

—சென்னை அரசியன் முறை விளக்கம்.

கா. சிவ. க.)

கவின்கலைப் பகுதி - Fine arts

"மண்ணியல் சிறுதேர்"

[திரு. அ. சிதம்பரநாதஞ் செட்டியார், பி.ஏ.]

"மண்ணியல் சிறு தேர்" என்னும் எண்ணறுஞ் சுவை ததும்பும் பாட்டிடைவைத்த உரைவகைப் பனுவலொன்று மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையாரால் சமீபத்தில் வெளியிடப்பட்டுளது. அது சூத்திரகன் என்னும் வடமொழிவாணர் அம் மொழியிற் செய்த "மிருச்சகடிகம்" என்னும் சங்கீர்ணப் பிரகரண நாடகத்தின் விழுமிய மொழிபெயர்ப்பாகும். அதனை நமக்குத் தந்தவர்கள் "நல்ல பல நூலின் நறுஞ் சுவையும், மெய்ப் பொருளும், வல்லை யுணரும் மதி" பெற்ற பண்டித மணி கதிரேசச் செட்டியாரவர்கள்.

இந் நாடகத் தலைவனாய சாருதத்தனது அரும் பெரும் குணங்கள் யாவர் உள்ளத்தையும் ஈர்த்துருக்கும் பெற்றிய. எண்ணு செல்வம் அனைத்தும் பெற்ற அவ் வண்ணல் நல்ல நீர்த் தடம் போல் அல்லலுற்றோர்க்கு அளித்து மெலிவினை அடைகிறான். (பக். 46). "அவன் காண்டற்கு எல்லாராலும் விரும்பத் தக்கவன்; இன் சொலாளன்; தன் கொடைப்பெருமையைப் பிறரிடம் கூறுபவனல்லன்; நன்றல்லது அன்றே மறப்பவன்; பலவாறு விரிப்பதென்? கண்ணோட்டத்தால் தன் உடல், பொருள் முதலிய எல்லாம் பிறர்க் குரியன என்றே உணர்ந்தவன்; அடைக்கலம் புகுந்தார்க்கு அருள் செய்யும் வள்ளல்." (பக். 86). "மலர்ந்த மாதவிக் கொடியையும் வளைத்து மலர் பறிப்பின், அங்ஙனம் செய்தலால் ஓர் அமயம் அதன் தளிர் உதிர்ந்து விடுமோ என்னும் ஐயத்தால் அக் காரியத்தைச் செய்தற்கும் மனம் ஒருப்படாத இனிய நண்பன் அச் சாருதத்தன்." (பக். 344). அவன் தனது தண்ணருங் குணங்களாலேயே எண்ணரும் இடர்களை அடைகிறான் என்பதை இந் நாடகம் காட்டுகிறது எனின், அஃது உலகியலை அன்றி வேறெதைக் காட்டுகிறது? தன் பொருள் வளங் குன்றியகாலையில், தன்னிடத்து அடைக்கலமாக வைக்கப்பட்ட பல கலன்களைத் திருடனொருவன் திருடிச்சென்றானாகவும், அத் திருடன் வறிதேகாது பயனெய்தினான் என்பதுபற்றி அகமகிழும் அவ் வண்ணல், 'கள்வன் வந்து கன்னமிட்டு வெளியேறினான்' என்ற சொல்லை முதற்கண் கேட்டகாலையில், அவ் வேழைக் கள்வன் தன்னில்லுட் புக்கு ஒன்றும் பெறவில்லையே என வருந்தி யிருப்பன் கொல்லோ என்று தான் எண்ணுங்கால் நாம் வியப்படையாவிடினும், "வீட்டிற் கன்னம் வைக்கப்பட்டது" என்ற சொல் கேட்டவுடனே அக்கன்னத்துளையைக் கண்டு "அது அழகாக இருக்கிறது, குட வுருவுடைத்து" என்று சொல்லி அவன் இன்புறுங்கால் வியப்புறாது நிற்போமா?

அடைக்கலப் பொருளினிமித்தம் அதற்கீடாகத் தன் மனைவி தனக்கு அனுப்பிய இரத்தின மாலையைக் கண்டு, "ஓ பார்ப்பனி (என் மனைவி) என்மாட்டு அருள் புரிகின்றாள். அந்தோ! இப்பொழுதுதான் வறியவனாகின்றேன்" என்று கூறுங்கால் அவனது இணையற்ற பெருமை துணைக் கூற லரிதாய்த் தோன்றுகின்றது.

இத்துணைப் பெருமை வாய்ந்த தருமனது முகத்தைக் காண்டலும் சண்டாளர்களுக்குள்ளேயே இவனைக் கொல்வதில் விருப்பின்றிப் போதலும், சீட்டுப் போடலும், வாள் நழுவி வீழ்தலும் வியப்பன்றே. பின், வசந்தசேனையைக் கொன்றதாகப் பொய்க் கொலைக் குற்றத்தைக் கோடிய மனத்தாற் சாருதத்தன் மீது சாற்றிய சகாரன் என்னும் காதகன் தப்புவதுதான் வியப்பு. ஆனால், அவனும் சாருதத்தனை யல்லாது வேறு யாரிடம் அடைக்கலம் புகுந்தாலும் அந் நிலையில் உய்ந்திருக்கமாட்டான். அப் பேய் போலுங் கொடியானை நாய்களை விட்டுக் கடித்துண்ணச் செய்ய வேண்டுமெனக் கூறும் சருவிலகன் என்னும் அந்தணன் சொற்கேளாது, செந்தண்மை கொண்டொழுகும் அறவோனாகிய சாருதத்தன் விடுதலை செய்தல், வியப்பன்று.

ஆனால், சாருதத்தன் நமக்கு வியப்பை எவ்விடத்துந் தாராது செல்கின்றானில்லை. வியப்பை நயவாரும் நயந்து வியக்கும்படி ஓரிடத்தே நடந்துகொள்கின்றான். கழுவில் ஏற்றித் தன்னைக் (காரணமின்றிக்) கொல்லும்படி அரசன் ஏவினான் என்பதைக் கேட்ட சாருதத்தன்,

"எனைத்
தகவறக் கொல்லுதி; சாற்றுமிச் செயலால்
சுடுநர கிடைநின் குடிவழி மக்களொடு
கடிதின் வீழ்ந்து படுதுயர் உறுகவே"

என்று கூறுகின்றானாயின், குணமென்னும் குன்றேறி நின்றார்க்கும் கண நேரம் வரும் சினமுண்டு என்றும், உலகில் அற்றார் நவை முழுதும் என்றற்கு யாரும் இலர் என்றும் கவி காட்டக் கருதியதாகக் கருதி அடக்கிக்கொள்வதல்லால் வேறென் செய்வது? இங்ஙனம் வியக்கத் தக்க குணநலன் பலவும், அக் குணநலத்தானேயே விடக்கத் தகும் குற்றமொன்றும் பெற்று நின்ற சாருதத்தனை முற்ற முடிய அறிய வேண்டுவார், நூலினுள் நுழைந்து பார்க்கக் கடவர்.

இனி, மனக் கினிய உவப்பளிக்கும் பகுதிகளில் சில காண்போம். "வண்டி மாற்றம்" என்னும் ஆறாம் அங்கம் முழுதுமே ஒரு பெருங் கருங் கூத்து (a comedy of errors) ஆகலின், அது முழுதும் நூலிலேயே காணல் தகும். மற்றைய சில பகுதிகளையே ஈண்டு நோக்குவோம். வசந்தசேனையின் இல்லத்துள் எட்டாங் கட்டிற் புகுந்த விதூடகன் வசந்தசேனையின்

நற்றாயைக் கண்டு, "பெரிய தெய்வ வுருவத்தைப் போன்ற இவளை முதலில் உள்ளே புகுத்திப் பின்னர் இவ் வீட்டின் வாயில்வழி நிருமிக்கப்பட்டதுகொல்?" என்று சேடியை வினாவும் இடமும் (பக். 163), சேடன் போட்ட வினா விரண்டிற்கு அவன் விடை தந்து பதங்களை மாற்றிக் கூறும் இடமும் நகைச் சுவை தருவனவாம். மாமரங்கள் அரும்புங் காலம் "வசந்தம்" என்றும், கிராமங்களைக் காப்பது "சேனை" என்றும் விதூடகன் சாருதத்தன்பாற் கேட்டுக் கூறியதைச் சேர்த்துக் கூறும்படி சேடன் சொல்ல, "சேனை வசந்த" என அவன் விளம்ப, பதங்களை மாற்றிச் சொல்லுமாறு பணிக்கப்பட்ட விதூடகன் பாதங்களைத் திருப்பிக்கொண்டு "சேனை வசந்த" என்று கூறுமிடம் அது (பக். 181-182). தேவர் கடன் இறுக்குங்கால் இடத் தோளினும், தென்புலத்தார் கடன் இறுக்குங்கால் வலத் தோளினும் அணியப்படும் பூணூல் (பக். 370), கன்னம் வைக்கும் சமயத்தில் சுவரில் துளை அளக்கவும், தாலிப் பூட்டகற்றவும், கதவுத் தாழ் திறக்கவும், தேள் கொட்டினாற் கட்டவும் உதவும் என்று கூறிச் சருவிலகன் இந் நான்கனுள் இரண்டிற்குத் தனது பூணூலைக் கையாளுவது கண்டு இன்புறற்பாற்று. நீதி மன்றத்தே காட்டப்பட்ட அணிகலன்களைக் கண்ட வசந்தசேனையின் தாய், "இது அதனை (வசந்தசேனையின் அணியை) ஒத்திருக்கின்றது. அஃதன்று" என்று கூறியவுடன், சகாரன் "கண்களாற் சொல்லி வாக்கினால் மறைத்துவிட்டாய்" (பக். 348) என்று கூறுவதைப் பார்த்து இன்புறுபவரே, "காணப்பட்டான் ஆரியன் (என்று பாதி கூறிய அளவில்) இல்லை; ஆரியை வசந்தசேனை காணப்பட்டாள்" (பக். 235) என்ற சந்தனகனது சொற்கேட்டு இன்புற்றாராவர்.

மேலும், சகாரன் பகர்கின்ற மொழிகளெல்லாம் நகைச் சுவை மலிந்து நிற்கின்றன. ஆங்கில நாடக வாசிரியர் ஷெரிடன் (Sheridan) எழுதிய நாடக மொன்றனுள் வரும் ஸ்ரீமதி மேலப்பிராப் (Mrs. Malaprop) என்பாளுடைய மொழிகளால் விளையும் விநோதம் எத்தகைத்தோ அத்தகைத்து இச்சகாரன் கூற்றால் விளைவதும். செய்யுள் 45, 257, 267 முதலான புராணவிருத்தங்களையும், ஆகம விருத்தங்களையும் காண்பார் அதனை அறியலாம்.

அன்பின் ஐந்திணையில் "ஒப்பு வழி யுவத்தல்" என ஒரு துறை யுண்டன்றோ? அத் துறையை யொட்டியதே நூனாயகமாக விளங்கும் பண்டைத் தமிழ் நூல் சிலவற்றிற்கும் இம் மண்ணியல் சிறு தேர்க்கும் உள்ள ஒப்புமை கண்டு உவத்தலும்.

இத்தகைய அரிய பெரிய அருமருந்தனைய நூலை நமக்குத் தந்து புகழைத் தமதாக்கிக் கொண்டவரும், நந் தமிழ் நாட்டுக் குறையொன்றை நிறைவு செய்த கோதிலாமணியாரும் ஆகிய பண்டிதமணியார் அவர்கட்குத் தமிழுலகு பெரிதுங் கடப்பாடுடைத்து.

ஆராய்ச்சிப் பகுதி-Research

தமிழ் மன்னர் பெயர்

[பண்டித திரு. ஞா. தேவநேயப் பாவாணர்.]

பண்டைத் தமிழ் மன்னர்க்குப் பல பெயர்கள் வழங்கினும் அவற்றுட் பாண்டியன், சோழன், சேரன் என்பவை மிக முதுமையும், முதன்மையும் பற்றிய வாகும். பாண்டியன், சோழன், சேரன் என்பதே கால முறையாயினும், இசைவு பற்றிச் சேரன், சோழன், பாண்டியன் எனத் தலை மாற்றிக் கூறப்படும்.

தமிழரசர் கொடிவழிகள் ஆரிய வருகைக்கு முன்னமே தமிழ் நாட்டிலிருந்தும், அவற்றின் பெயர்கட்கு வட மொழி மூலங் காட்டினர் கால்டுவெல் கண்காணியார். மேனாட் டறிஞர் எத்துணையோ ஆராய்ச்சி வன்மையும், நடுவு நிலைமையும் உடையரேனும், இந்திய மொழிகளெல்லாம் வடமொழிவழி யென்னு மோர் தவற்றெண்ணம் அவர் மனதிற் குடி கொண்டமையின், அவராராய்ச்சி சிற்சில விடத்துப் பயன்பட் டிலது. சேர சோழ பாண்டியர் தமிழ் மன்னரா யிருப்பவும் அவர்க்குப் பெயர் வட மொழியினின்று வந்தன வென்பது எங்ஙனம் பொருந்தும்? ஆரிய மரபினரா யிருந்திருப்பினன்றோ அவர்க்கு ஆரியப் பெயர் வழங்கியிருக்கும்? சேர சோழ பாண்டியப் பெயர்கள் சேர சோட பாண்டிய ரென்று அசோகக் கல் வெட்டி லிருக்கின்றன வென்பது ஆரிய வழிக்கு ஆதார மாகுமா? ழகரம் தெலுங்கினும், வட மொழியிலும் டகரமாய்த் திரியும்.

உ-ம்.	தெலுங்கு	வட மொழி
	கோழி - கோடி	நாழி - நாடி
	கிழங்கு - கெட்டா	பீழை - பீட

நாளம் = மூங்கில். நாளி-மூங்கிலாற் செய்யப்பட்ட படி. இக் காலத்தும் மூங்கிற்படிகளைச் சிற்றூர்களிலும், சிறு கடைகளிலும் காணலாம். நாளி - நாழி. சீகாளி - சீகாழி.

சோழன் என்பது சோடன் என்பதன் திரிபென்றும், நாழி என்பது நாடி என்பதன் திரிபென்றும், தமிழர் என்பது த்ராவிடர் என்பதன் திரிபென்றும், பாண்டியன் என்பது பாண்டுவினின்றும் திரிந்ததென்றும் கூறுவர் கால்டுவெல் கண்காணியார்.

மெய்யெழுத்துக்கள் ரகரத்தோடு சேர்ந்து மொழிமுதல் நிற்பது வட மொழியிற் பெரும்பான்மை. அதன்படி த என்பது த்ர என்றாகும். மகரத்திற்கு வகரம் போலியாகும்.

உ - ம். குமி - குவி. மிஞ்சு - விஞ்சு.

ழ வட மொழியில் ட ஆகும். இங்ஙனம் தமிழ என்னும் சொல் வட மொழியில் த்ரவிட என்றாகும். தமிழகம் என்னும் சொல் கிறிஸ்துவுக்குப் பன்னூறாண்டிற்கு முன்னரே மேலை நாடுகளில் Damurica - Lemurica - Lemuria என்று பலவாறு திரிந்து வழங்கி யிருப்பவும், அதற்குப் பின் இந்தியாவிற்கு வந்த ஆரிய வாய்ச் சொல்லின் திரிபென்பது சற்றும் பொருந்தாது.

தமிழ் மன்னர் பெயர் வட மொழிப் பழங் காவியங்களாகிய பாரத இராமாயணங்களிற் கூறப்பட்டுள. உதியன் என்னும் ஓர் சேர நாட் டரசன் பாரதப் படைகட்குச் சோறு வழங்கியமை பற்றிப் பெருஞ் சோற்றுதியஞ் சேரலாதன் என்று பழந் தமிழ் நூல்களிற் பாராட்டப்படுகின்றான். வான்மீகி இராமாயணத்திற் றமிழ் மன்னரைப் பற்றிய குறிப்பு, பிற்காலத் திடைச் செருகலென்று சிலர் புறக்கணிக்கலாம். இராமர் தெற்கே வந்து அகத்தியரைக் கண்டதை எவரும் மறுக்கார். அகத்திய ருண்மை யானே பாண்டிய னுண்மையும் அறியப்படும். பாரதத்திற்கு முன்னமே பாண்டிய னுண்மை இராமாயணத்தால் விளங்காவிடினும், கிறிஸ்துவுக்கு முன்னைய மேனாட்டுப் பூமி சாஸ்திரிகள் குறித்துள்ள தமிழகப் படங்களானும், பிரித்தானியப் பொருட் காட்சிச்சாலைத் தலைவர், Dr. ஹால் என்பவர் பாபிலோனியக் குடைபொருள்கள் பற்றிக் கூறியுள்ள ஆராய்ச்சி யுரையானும் விளங்குவதாகும்.

பாண்டு, பாண்டியன் என்னும் பெயரொப்புமை பற்றியும், பாண்டுவின் மகனாகிய அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை வந்தபோது பாண்டியன் மகளை மணந்தான் என்னும் கதை பற்றியும், மகாவம்சம் என்னும் இலங்கைச் சரித்திர நூலில் பாண்டியன் என்னும் பெயர் பாண்டி, பாண்டு எனத் திரிந்திருப்பது பற்றியும் ஆரியர் வருகைக்கு முன்னமே வழங்கிய பழந் தமிழ்ப் பெயராகிய பாண்டியன் என்பதை, பாண்டு என்பதினின்றும் திரிந்த பாண்டவன் என்னும் தத்திதாந்தத் திரிபென்று கூறுவது மொட்டைத் தலைக்கும், முழங்காற்கும் முடி போட்ட தொக்குமன்றோ?

பாண்டியன், சோழன், சேரன் என்னும் பெயர்கள் வட மொழியாயின், வடமொழியில் அவற்றிற்குப் பொருளிருத்தல் வேண்டும். பாண்டியப் பெயர்க்குக் கூறும் வடமொழிப் பொருள் சரித்திர வாயிலாய் மறுக்கப்பட்டது. சோழசேரப் பெயர்கட்குப் பொருந்தப் புளுகும் பொருளும் வட மொழியி லில்லை. இனி, இத் தமிழ் மன்னர் பெயர்கள் தமிழ்ச் சொற்களாயின் அவற்றிற்குப் பொருள் என்னை யெனிற் கூறுதும்:—

பாண்டியன்—பாண்டியன் = பாண்டி + அன்.

பாண்டி என்பது வட்டமென்னும் பொருளிலேயே வழங்கப்பட் டுள்ளது. பாண்டி, ஒரு விளையாட்டு. ஓட்டை வட்டமாக நறுக்கி நிலத்தில் அரங்கு கீறி எறிந்து விளையாடுவது. வட்டமாக நறுக்கப்பட்ட ஓடு வட்டு எனப்படும். வட்டு என்பது கருவியாகுபெயராய் அதைக் கொண்டு ஆடும் விளையாட்டையும் உணர்த்தும்.

'கல்லாச்சிறாஅர் நெல்லிவட்டாடும்' (குறுந்தொகை)

வட்டு என்பதன் பரியாயப்பெயராகவே பாண்டி யென்பது தென் னாட்டில் வழங்குகின்றது.

தொட்டி, புட்டி, விட்டி என்பன தொட்டில், புட்டில், விட்டில் என்று நின்றாற்போல, பாண்டி என்பதும் பாண்டில் என நிற்கும்.

பாண்டில் = வட்டம். பாண்டில் என்பது வட்டம் என்னும் மூலப் பொருள் பற்றியே பல பொருள்களை யுணர்த்தும்.

பாண்டில் = 1. அகல், வட்டமா யிருப்பது.
2. காளை, வட்டமாய் அல்லது உருண்டிருப்பது.
3. கைத் தாளம், வட்டமா யிருப்பது.
4. நாடு. ஒரு நாட்டை அல்லது நாட்டுப் பகுதியை வட்டம், வட்டகை, வட்டாரம் என்று சொல்வது வழக்கு. மண்டலம் என்பதும் வட்டத்தின் பரியாயப் பெயரே. இங்கிலீஷிலும் (Circle) என்று நாட்டுப் பகுதியைக் கூறுவர்.
5. சக்கரம், வட்டமா யிருப்பது.
6. *பண்டி (வண்டி).

பண்டி யென்பது வண்டி யென்பதன் திரிபு. ப—வ, போலி. வண்டி - வள் பகுதி, தி விகுதி. வள் + தி = வண்டி, வளைந்திருப்பது. வண்டி யென்பது முதலில் சக்கரத்தையும் பின்பு உறுப்பாகுபெயராய்ச் சகடத்தையும் குறிக்கும்.

பண்டி என்பதே பாண்டி, பாண்டில் எனத் திரியும்.

'பாண்டில் எடுத்த பஃறாமரை கீழும் பழனங்களே' என்னும் திருக்கோவை யடியில் பாண்டில் என்பது கிண்ணம் என்னும் பொருளில் தாமரைக் குவமையாய் வந்துள்ளது. கிண்ணம் வட்டமா யிருப்பது.

வட்டம் என்னும் சொல் உருட்சியையும், திரட்சியையும் குறிக்கும். ஓர் உருண்டையின் பரப்பு தூரத்தில் வட்டமாகவே தோன்றும்.

* கொல்லாப் பண்டி எனச் சிலப்பதிகார உரையில் வழங்குவது காண்க. (கா. சிவ. க.)

பாண்டியன் குதிரைக்குக் கனவட்டம் என்று பெயர். ஓர் இளைஞனை இளவட்டம் என்பர் தென்னாட்டார். வட்டம் என்பதைப் போலவே அதன் பரியாயப் பெயராகிய பாண்டில் என்பதும் உருட்சியும், திரட்சியுமாகிய பொருள்களை யுணர்த்தும்.

பாண்டில், உருட்சியான ஒரு காளையை யுணர்த்துவது போல உருட்சியான ஒரு வீரனையும் உணர்த்தும். காளை என்னும் பெயர் உவமையாகுபெயராய் வீரனைக் குறிப்பது செய்யுளிற் பெரு வழக்கு. தென்னாட்டார் காளை என்னும் பெயரைத் தம் சிறார்க்கிடுவது இன்றும் வழக்கம். இப்போதுள்ள சிவகிரி ஜமீன்தார் அவர்களின் பெயர் செந்தட்டிக் காளைப் பாண்டியன் என்பது. ஆகவே பாண்டி யென்பதற்கு வீரன்* என்பதே பொருளாம். அது அன் விகுதி பெற்றுப் பாண்டியன் என நிற்கும். பாண்டியன் வீரத்தைச் சங்க நூல்களானும், 'பாண்டியனார் பராக்கிரமம் பகர்வரிதே யம்மானே' என்னும் புகழேந்தியார் கூற்றானு முணர்க.

இனி, பாண்டியனுக்குரிய மறு பெயர்களாவன:—
செழியன் = செழிய நாட்டை யுடையவன்.
தென்னவன் = தென்னாட்டரசன்.
வழுதி = புலவரால் வழுத்தப்படுகின்றவன்.
மாறன் = பகைவரொடு மாறு கொண்டவன்.
மீனவன் = மீனக் கொடியுடையவன்.

கைதவன் = தன் கையை வெட்டினவன் (பொற்கைப் பாண்டியன். அவனுக்குப் பின்னால் ஏற்பட்ட பெயர்.)

பஞ்சவன் = ஐந்து சிற்றரசரால் ஆண்டவன். (கல் வெட்டுகளையும், சரித்திரத்தையுங் காண்க.) முல்லை, குறிஞ்சி முதலிய ஐந்திணை நிலங்களை யுடையவன் என்று பொருள் கூறல் பொருந்தாது.

கௌரியன் = கௌரியின் வழித் தோன்றல்.
கௌரி தடாதகைப் பிராட்டியாரான பார்வதி.

சின்னமும், அங்கமும் பற்றிய தொடர் மொழிப் பெயர்கள் இங்குக் கூறப்பட்டில.

(தொடரும்)

---

* "பாய்ந்தான் பாண்டியன் புலிபோல" என்பது தென்னாட்டில் வழக்காற்றிலிருப்பதையும் நோக்குக. (கா. சிவ. க.)

அச்சுதப்ப நாயக்கர்

(கி. பி. 1577 - 1614)

[திரு. கி. சாமிக்கண்ணு அவர்கள்]

தோற்றுவாய்:—பூந்தண் பொன்னி யெந்நாளும் பொய்யாதளிக்கும் புனனாட்டுள் பண்டைச் சீரும் சிறப்புங் குன்றாது இயற்கையரண்களோடு கூடிய தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு கி. பி. 1577 முதல் 1614 வரை செங்கோலோச்சிப் புகழ் படைத்த அச்சுதப்ப நாயக்கர், தஞ்சாவூர் நாட்டை ஆண்ட நாயக்க அரச வழியின் இரண்டாம் மன்னர். இவர், சேவப்ப நாய்க்கரின் மகன். சின்னசேவப்ப அச்சுதப்ப நாய்க்கர் என்பது இவருக்கு வழங்கிய மறுபெயர்.

காலம்:— தஞ்சைப் பெருவுடையார் கோயில் இரண்டாவது கோபுரத்துத் தென்பக்கத்து வெளிச்சூழலில் சகாப்தம் 1499 (கி. பி. 1577) ல் சேவப்ப நாயக்கர் குமாரர் அச்சுதப்ப நாயக்கர், பொன்செய் கொல்லருக்குச் சில இறையிலிகள் விட்டதாகத் தெளிவாய்க் கூறும் ஒரு கல்வெட்டு வரையப்பட்டிருப்பதிலிருந்து இவர் காலம் தெரிகிறது.

இறைமாட்சி:—இவரதுரிமை மூர்த்திமாம்பா வென்பாள் பெயரால் மூர்த்திமாம்பாபுரம் என்று சிற்றூரொன்றுளது. இவ்வூர் இப்போது பாவநாசம் கூற்றத்தில் சேர்ந்திருக்கிறது. இவ்வூரில் பெருங் கோயிலொன்று சீரழிந்த நிலையிலுளது. முத்திசையும் புனற்பொன்னி மொய்பவழங் கொழித்துந்த வளம் பெறுவது தன்னாடாதலால், அக்காவிரியாற்றின் கல்லணையைப் புதுப்பித்துப் பழுது பார்த்தார்.

கல்விநிலை:—பன்னூல்களையும் வெளிவரச் செய்து கல்வியைப் பரப்பினார். இவரது அரசாட்சி காலத்தில் அமைச்சராயிருந்தவரும், தென்னாடெங்கும் புகழ்பெற்ற கர்நாடகப் பிராமணருமாகிய கோவிந்தய்யர் என்ற கோவிந்த தீட்சிதர் கட்டளையால் அறம் வளர்த்த செல்வியுடன் செம்பவழக் குன்றுறையும் திருவையாற்றுப் புராணம் வடமொழியினின்றும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. இவர் ஈகைக்குணம் படைத்து அறநூல்களில் சொல்லியபடி யெல்லாம் தக்கவர்களுக்கு நற்கொடைகள் அளித்தார்.

கடவுட்கோட்பாடு:—தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையாலடிவருடப் பள்ளிகொள்ளும் கோமளக் கருமணிக்கு விலை பெற்ற மணியிருக்கையும், விலைமிகுந்த மணிகளால் பதக்கம், முடி, காற்சதங்கை முதலிய அணிகளும் அளித்து அணிவித்தார். இவர் தமது பெயரால் பார்ப்பனச் சேரிகள் பல கட்டுவித்து

அவைகளில் மறைவல்லாரைக் குடியேற்றினர். திருமயிலாடு
துறை, திருவிடைமருதூர், திருவலஞ்சுழி, பழமலை, திருவை
யாறு, இராமசேது முதலிய இடங்களில் படித்துறைகளும், புஷ்ய
மண்டபங்களும் கட்டுவித்தார். புலியூர், மந்திபாய் வடவேங்
கடம், காளத்தி, முதலிய இடங்களுக்குப் பல திருப்பணிகளும்,
பணிவிடைகளும் செய்தார். இவர் தமது அமைச்சரான
கோவிந்த தீட்சிதரின் வேண்டுகோளின் பேரில் மகாமக நாளன்று
திருக்குடந்தையில் துலா புக்கார். அதாவது துலாக்கோலின்
(தராசு) ஒரு தட்டில் தாம் இருந்து மற்றொரு தட்டில் தம்
நிறைக்குச் சரியாகப் பொன் முதலிய பொருள்களைத் தானம்
வழங்கியதாகவும், அப்பொருள் பெரும்பாலும் அறங்கள் செய்
யச் செலவழிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது. திருக்குடந்
தையில், தன்னகத்தே 13 கிணறுகளையுடைய பெரிய மகாமகக்
குளத்தைச் சீர்திருத்திப் படித்துறைகளையும், அக் குளத்தைச்
சுற்றிப் பதினாறு சிறு கோயில்களையும் (ஷோடச லிங்கங்கள்
உடைய மண்டபங்கள்) சிறப்பாகக் கட்டி முடித்தார். இவ் விரி
வான வரலாறு மகாமகக் குளத்தின் மேற்குக் கோடியில் துலா
பார மண்டபம் என்று அழைக்கப்பெறும் சிறு கோயிலிலுள்ள
கல்வெட்டில் வரையப்பட்டிருக்கிறது. திருக்குடந்தையில் மிக்க
பொருட் செலவில் இராமசாமி கோயில் கட்டினார். இக் கோயி
லில் செய்யப்பட்டுள்ள சிற்ப வேலையி னருந்திறல் நுணுகி
யாராய்ந்து மகிழத்தக்கது. இக்கோயிலி னுட்சூழல் சுவர்களில்
இராமாயணத்தை ஓவியங்கள் வாயிலாகக் காட்டியிருப்பது கண்டு
களிக்கத் தக்கதொன்று. இக்கோயில் நற்காலச் சீட்டுவருவா
யேற்பாட்டால் அண்மையில் திருப்பணி செய்து முடிக்கப்பட்
டுளது.

நாட்டினளவும் முடிவுரையும்:— இவர் காலத்தில் இவரது
நாடு திரிசிராப்பள்ளிமுதல் குணகடல்காறும், இராமசேதுமுதல்
பழமலை வரையிலும் எட்டி யிருந்தது. இவர் நாகபட்டினத்
தில் கடல் வழியாய் வந்திறங்கின பாரசீகர்களை முறியடித்த
தாகச் சொல்லப்பட்டிருப்பதில் பாரசீகர்கள் என்பது முகம்மதி
யர்களைப் பற்றி யிருக்கலாம். இவர் காலத்தில் சோழ குலத்தி
னன் ஒருவன் சிறிது இவருக்குத் துன்பம் விளைவித்துக்
கொண்டு அங்குமிங்கும் நாட்டைக் கொள்ளையடித்து வந்தான்.
கர்நாடகத்தில் அரசுரிமையின் பொருட்டு உள்நாட்டுக் கலகம்
நடந்தது இவர் காலத்திலாம். அச்சுதப்ப நாயக்கர் தம்முடைய
மகன் ரகுநாத நாயக்கருக்குத் தமது வாணாளிலேயே முடிசூட்டி
வைத்து விட்டுக் காவிரியிராற் றிடைக்குறையி லமைந்துள்ள
கோயிலில் அழகிய மணவாளனை வணங்கிக்கொண்டு அங்கேயே
நிலையாய் வாழ்ந்திருந்து அந்தமிலின்பத் தாசாள் வேந்தாயினார்.

வடிவு திருந்த அறிவு வளர்ந்த வகை

[திரு. பா. மாணிக்க நாயக்கர்—திரு. க. ப. சந்தோஷம் B.A., L.T.]

(வடிவும் அறிவும் ஒன்றையொன்று பற்றிநின்று திருந்தி வளர்ந்
தன என்பதைப் பொருளாகக்கொண்டு காலஞ்சென்ற நுண்ணறிஞர்
திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் 30-9-21-ல் ஆங்கில மொழியில்
நிகழ்த்திய ஒரு சொற்பொழிவின் மொழிபெயர்ப்பு. புல்முதல் மக்கள்
ஈருக உள்ள உயிர்கள் பெற்றிருக்கும் உருவங்களைக் கூர்ந்து நோக்கி
அறிவின் வளர்ச்சியைக் காட்டுகின்றது இவ்வுரை. இப்பொருள்பற்
றிய நினைவு முதன்முதல் தமக்கு எங்ஙனம் வந்ததென்பதைக் கூறி
மேற்செல்கின்றார்.)

யான் கல்லூரியிற் படித்துக்கொண்டிருந்த காலத்தில் உட
லின் வடிவிற்கும் அறிவிற்குமுள்ள பொருத்தத்தைப்பற்றி
நினைக்க நேர்ந்தது. அக்காலத்தில் ஆங்கில மொழியின் எழுத்
துக்களையாவது அறிந்த ஒரு தமிழாசிரியருங் கிடையாது.
தமிழ்ப்பாடம் நடக்கும் நேரத்தை விளையாட்டு நேரமாகவே
நாங்கள் கருதினோம். இந்த நிலையில் ஆங்கிலமுந் தமிழும் நன்
கறிந்த ஒருவர் தமிழாசிரியராக எங்கள் கல்லூரிக்கு வந்தார்.
அவர் பெயர் சரவணப்பிள்ளை. இந்நல்லார் தமிழாசிரியராக வந்த
பின், தமிழைக் கற்குநேரம் முன்போல் எளிதாகவும் இனிதாக
வும் கழியவிடமில்லாது போயிற்று. ஆசிரியர்மேல் எங்களுக்கு
எரிவுண்டாக, நாங்கள் பலவகையில் அவர்க்கு இடர்செய்ய
நினைத்தோம். ஆசிரியர் ஆளுந்தன்மை நன்குடையவரா
யிருந்தமையின் எங்கள் சூழ்ச்சிகளெல்லாம் வீணாயின.

சரவணப் பிள்ளையவர்கள் தமிழ்க்கவியை எங்களுக்குப்
புகட்டு முறையில் சில மாறுதல் நிகழ்த்தக் கருதினார். இஃதெங்
கள் செவிக்கெட்டிய பொழுது, 'தமிழாசிரியர் தமது பெரு
மையை வெளிப்படுத்த ஏதேதோ செய்யத் துணிகின்றார்',
என்று நாங்கள் நினைத்தோம். படித்தவற்றைப் பற்றியல்லாது,
பொதுவான ஒரு அல்லது சில பொருள்களைப்பற்றி விரிவாக
எழுதப்பயிற்றுவிக்கும்முறை ஆங்கிலத்தில் உண்டு. (General
paper). அவ்வாறே தமிழிலும் மாணவர் எழுதப் பயிற்றுவிக்
கப்படல் வேண்டுமென்று ஆசிரியர் எண்ணங்கொண்டார்.
ஒருநாள் அவர் வகுப்பிற்கு வந்து, 'மூன்று மணி நேரம்
ஆகக்கூடிய ஒரு தேர்வு நடத்தப்போகின்றேன்' என்று கூறி
னார். இதைக்கேட்டு மற்றவர்கள் திகைத்தனராயினும் யான்
அதற்கு இசையத் துணிந்தேன். மற்றவர்களும் அதற்கிணங்க
வேண்டுமென்று என் கண்களினாற் சாடை காட்டினேன். யான்

இங்ஙனம் செய்ததற்குக் காரணம், ஆசிரியர் கருதிய ஏழரை நாழிகைத் தேர்வில் ஒருவன் தன் நினைவிற்குவந்த குழறுபாடுகளை எல்லாம் கொட்டினாலும் அது குற்றமாகாது என்பதே. ஆதலின், 'இவ்வேற்பாடு மிக நல்லது' என்று நாங்கள் அதைப் புகழ்ந்தோம். ஆசிரியர் மிகத் தேர்ந்தவராயினும் அவருடைய முறைகள் எங்களுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. இஃதொருவேளை, பதினாறு, பதினேழு, பதினெட்டு ஆண்டுகளுக்கு மேற்படாத எங்கள் வயதின் குற்றமாக இருக்கலாம். ஏழரை நாழிகை நேரம் தமிழில் ஒரு தேர்வை நடத்த ஆசிரியர் எண்ணியது எங்களை இழிவுபடுத்தும் பொருட்டே என்று எங்களுக்குத் தோன்றிற்று.

மேற்கூறிய ஏற்பாடு நடைபெறத் தொடங்கியபின் ஒருநாள் 'வாழை மரம்' என்பதுபற்றி எங்களை அவர் எழுதச் சொன்னார். பட்டம் பெறும் வகுப்பிற்கு முந்திய (F. A.) வகுப்பில் 'படித்துக்கொண் டிருந்த எங்களை இதுபோன்ற ஒரு பொருளைக் குறித்து எழுதச் சொல்லியது மிக இழிவென்றே நாங்கள் கருதினோம். ஒருவன் எழுந்து நின்று, 'இப் பொருள் பற்றி எங்களை வரையச் சொல்லி எங்கள் உளத்தைத் தாங்கள் புண்படுத்துகின்றீர்கள்' என்றான். ஆசிரியர் அப்பொழுது நிரம்பிய அமைதியுடன் 'நல்லது, இப் பொருள் பற்றி எழுதுவது கடிதென்றே நான் நினைத்தேன். அறிவில் நீங்கள் இவ்வளவு முதிர்ந்தவர்கள் என்பதை நான் அறியாமற்போனேன். அடுத்த முறை பெரிய கேள்வி யொன்று கேட்கிறேன்' என்று நவின்றார். இதன்பின், வாழை மரத்தைப் பற்றிய கட்டுரையை நாங்கள் தொடங்கினோம். பொருள் மிக விரிந்த தொன்றதலாலும், எழுதுவதற்கு ஏழரை நாழிகை நேரமிருந்ததாலும், வாழைப் பட்டையைப் பொடிப்பட்டையாக்குவதற்குப் பதஞ் செய்வதிலிருந்து, பிணங்களைத் தூக்கிக்கொண்டு செல்லுங்கால் வாழை மரங்களுங் கன்றுகளும் எங்ஙனம் பயன்படுகின்றன என்பதுவரையில் பலவற்றைப் பற்றி வரைந்து, முடிவில், புண்ணியார்த்தம், புருஷார்த்தம் ஆகிய இவற்றிற்கு வாழையைப் போல் உதவுவது வேறொன்றுமில்லை என்று காட்டினோம்.

அடுத்தமுறை ஆசிரியர் எங்களுக்குக் கொடுத்த பொருள் 'கடவுளைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்' என்பதாகும். 'வடிவும், அறிவும் ஒன்றிற்கொன்று இசைந்து வளர்தல்' என்ற பொருள் ஈண்டுத் தொடங்குகின்றது.

'கடவுளைப்பற்றி உங்களுக்கென்ன தெரியும்?' என்ற கேள்விக்கு விடை எழுதப் புகுந்த நான், 'அந்தக் கடவுளைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்' என்று தொடங்கினேன். இங்ஙனம் சிறிதும் அடக்கமின்றித் தொடங்கியபின், இடக்கர் என்று இலக்கணங் கூறும் குற்றத்தின்பாற்படுவதாகிய ஒன்றை எழுதினேன். அதன் கருத்து, கடவுளுக்கு ஆண்பெண் குறிகளில்லை என்பதாகும். இங்ஙனம் கூறியதை நிலைநாட்டுதற்கு யான் சான்றுகள் காட்ட வேண்டியதாயிற்று. யான் சிறுவனாயிருந்த நாளில் நூல்கள் பல எனக்குக் கிட்டாமையின் இயற்கையையே ஒரு நூலாகக் கற்றேன். புழுக்கள், விலங்குகள் முதலியவற்றை யான் கூர்ந்து கவனித்திருந்தேன். இவ்வகையிற் கண்டறிந்தவற்றையெல்லாம் 'கடவுளைப்பற்றி என்னதெரியும்?' என்ற கட்டுரையிற் புகுத்தினேன். எழுதுவதற்கு மூன்றுமணி நேரம் இருந்ததனால் இவைபற்றி யெல்லாம் விரிவாக எழுதிக்கொண்டே போய், இறுதியில், 'நேரம் போதாது' என்று குறைகூறத் தீர்மானித்திருந்தேன். பிறகு யான் எழுதியதாவது:—

'கடவுள் உண்டென்பதை ஏற்றுக் கொள்பவரும், ஏற்றுக் கொள்ளாதவரும், கடவுளிருப்பினும் அக் கடவுளைப்பற்றி நாம் அறியவியலாது என்பவரும், வேறு எக் கொள்கையினரும் ஒத்துக்கொள்ளக்கூடிய உண்மை ஒன்றுண்டு. உயிர்களிலெல்லாம் மக்கள் மிகச் சிறந்தவர்களென்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்த ஓர் உண்மை. குரங்கு, குதிரை, எருது, கழுதை ஆகிய உயிர்கள், மக்களோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால், குறைவுள்ளவைகள் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டே தீரவேண்டும். இதை ஒருவரும் மறுக்கத்துணியார்'.

இவ்வாறு கூறி, உயிர்களில் உயர்ந்தவற்றிற்கும் தாழ்ந்தவற்றிற்குமுள்ள வேற்றுமைகளை யான் எடுத்துரைக்கலானேன். கல்லூரியிற் பயின்ற நாளில் உடற்கூறும் உயிர்நூலும் எனக்கு இன்பம் பயக்கும் படிப்பாயிருந்தன. இவற்றிற்கண்ட சில உண்மைகளை யான் எழுதிய கட்டுரையில் வெளிப்படுத்தினேன்.

*வண்ணாத்திப் பூச்சியை எடுத்துக்கொள்வோமாயின், அது

* வண்ணாத்திப்பூச்சிகள் இடுகின்ற முட்டையிலிருந்து புழுக்கள் பிறக்கின்றன. இப் புழுக்கள் இலைகளைத் தின்று வளர்ந்து, குறித்த ஒரு நிலையை அடைந்தவுடன், தாங்களே அமைத்துக்கொள்கின்ற கூடுகளில், முட்டைக்குள் ளிருக்கும் உயிர்போல் ஒடுங்கி நிற்கின்றன. தக்க வளர்ச்சி பெற்றவுடன் அவை கூட்டைக் கிழித்துக்கொண்டு பன்னிறம் பொருந்திய இறகுகளுடன் வெளிப்படுகின்றன. நகர்கின்ற புழு நிலையிலிருந்து விண்ணிற் பறந்து திரியும் நிலையை அடைய இவை புலனடக்கித் தவங் கிடப்பனபோற் கூட்டி லொடுங்குகின்றன.

முதலிற் புழு நிலையி லிருந்து பின் ஒரு கூட்டி லடங்கிநின்று அழகிய இரக்கைகள் பெற்று வெளிப்படுகின்றது.

கூட்டி லிருந்து வெளிப்பட்டவுடன் வண்ணாத்திப்பூச்சிகள் புணர்ச்சியை நாடுகின்றன. இது நிகழ்ந்தபின் பெண் பூச்சி ஆயிரக்கணக்கான முட்டைகளை இட்டு மாள்கின்றது. வண்ணாத்திப்பூச்சியின் வாழ்க்கை இத்தொழிலிலேயே கழிகின்றதென்பது மிகைபடச் சொல்வதாகாது. மற்றொன்றை ஈண்டு நாம் கருத வேண்டும். அஃதென்னவெனின், இவ்வுயிர்களுடைய புணர்ச்சிக் கருவிகளின் அளவேயாகும். மிகச் சிறிய புழுக்கள் சிலவற்றை எடுத்துப் பகுத்துப் பார்த்திடின், புணர்ச்சிக் கருவிகளே அவற்றின் உடலாயிருப்பது புலப்படும். சிலவற்றில் உடலின் அரைப்பங்கு புணர்ச்சிக் கருவியாக அமைந்திருக்க, மற்றொரு பங்கில் எல்லாக் கருவிகளும் அடங்கியிருக்கக் காணலாம். அறுபது அல்லது எழுபது இராத்தல் நிறையுள்ள ஒரு செம்மறி யாட்டைக் கவனித்தால், அதன் புணர்ச்சிக் கருவிகள் மூன்று அல்லது நான்கு இராத்தல் எடையுடையனவா யிருக்கின்றன. மக்களுடைய புணர்ச்சிக் கருவிகளுக்கும் உடலுக்குமுள்ள வீதத்தோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால் ஆட்டில் நாம் காண்கின்ற இந்த வீதம் பெரியதாகும். இம்முறையில் உயிர்களை யான் ஒப்பிட்டுக் கொண்டுபோய், ஓர் உயிரைவிட மற்றோருயிர் உயர்ந்ததென்பதற்குச் சான்று அதன் புணர்ச்சிக் கருவிகள் (உடலோடு ஒப்பிடுங்கால்) அளவிற் சுருங்கி யிருப்பதுதானென்று காட்டினேன். மக்களுடைய புணர்ச்சிக் கருவிகள் மற்றெந்த உயிரின் குறிகளையும்விட அளவில் மிகக் குறைந்தவை என்று இவ்வாராய்ச்சியால் தெரிகின்றது. இது கண்டபின், கடவுளென்று ஒன்று இருந்தால அது மக்களைவிட உயர்ந்திருத்தல் வேண்டுமென்றும், உயர்ந்திருந்தால் அதன் குறிகள் நனி சுருங்கிய அளவுடையனவா யிருத்தல் வேண்டுமென்றும் சொன்னேன். ஆனால், எத்துணைச் சுருங்கி யிருக்கவேண்டு மென்பதை அளவிடுதல் யாங்ஙனம்? அது பத்துநூறாயிரத்தில் ஒரு கூறு என்று சொல்வோமாயின், அதனினுங் குறைந்த மற்றோரளவு இருத்தல் கூடுமே! குறி எவ்வளவு குறைந்திருப்பினும், அஃதிருக்கும் வரையில் கடவுட்டன்மை ஆண்டில்லை. ஆதலின், கடவுளுக்குக் குறியே யில்லை என்பது எனது முடிவாயிற்று.

இதற்குமேல், கடவுளென்ற கருத்தின் மற்றொரு பகுதியை எடுத்து எழுதினேன். இதிற் கடவுளுக்குக் காலில்லை என்பதை நிலைநிறுத்த முயன்றேன். இதற்குச் சார்பாக உயிர் நூல் உண்மைகளை முன்போல் எடுத்துக்காட்ட வேண்டியதாயிற்று. நூறு கால் அட்டை (Centipede) எனப்படும் ஓர் உயிர் இருக்கிறது.

அதற்குக் கால்கள் நூற்றுக்கு மேலேயே இருக்கின்றன. ஊர்ந்து திரிகின்ற சில புழுக்களுக்கு இன்னும் பல கால்கள் உண்டு. ஊர்ந்து திரிகின்ற உயிர்நிலையிலிருந்து மேலே செல்லச்செல்ல, கால்களின் தொகை குறைந்துகொண்டே வருவதைப் பார்க்கலாம். வண்டுகளுக்கு ஆறுகாலும், விலங்குகளுக்கு நாலு காலுமிருக்கக் காண்கின்றோம். வண்டுகளைவிட விலங்குகள் உயர்ந்தன. குரங்குகளை நோக்கும்போது அவை சிலவேளை இருகாலும் சிலவேளை நாற்காலும் உடையனவாய்த் தோன்றுகின்றன. மக்கள் நிலையில் கால்கள் இரண்டேயுள. முதன்முதல் உலகத் தொடக்கத்தில் தோன்றிய உயிர்களுக்கிருந்த நூறாயிரக்கணக்கான கால்கள், வரவரக் குறைந்து, மக்கள் வடிவம் அமைந்தபொழுது இரண்டாயின. கால்களின் தொகை குறையக்குறைய வடிவம் சிறிது சிறிதாய்த் திருந்தி மக்கள் உருவில் அது முற்றுப்பெற் றிருக்கின்றது. கடவுளுக்கு எத்தனை கால்களிருக்கவேண்டும்?

உயிர்களிற் சிறந்த மக்களுங்கூட விலங்கின் தன்மை யுடையவர்களா யிருக்கின்றனர். சிலர் கையுங்காலுங் கொண்டு நகர்கின்றனர். இந்த நிலையில் அவர்கள் பூனையை ஒத்திருக்கின்றனர். நேரே நிற்கின்ற தன்னிலைமை மாற, ஒரு மகன் குனிந்து கையுங் காலுங் கொண்டு நகருங்கால் அவன் பூனையின் நிலையை எய்துகின்றான். ஏனெனின், அந்நிலையில் விலங்கு பதுங்கும்போது அதன் எண்ணம் யாதாயிருக்குமோ அதுபோலவே அம்மகனின் நினைவும் இருக்கவேண்டுமாதலின், தான் அறியாமலே அவன் விலங்கைப் போலாகின்றான். பெண் ஒருத்தியைக் காதலித்துக் கெஞ்சும் நிலையில் ஒரு மகன் அவள்முன் முழங்காலில் நிற்கின்றான்: உள்ளே தோன்றுகின்ற ஓர் உணர்ச்சி நாற்கால் விலங்கின் நிலைக்குச் செல்லும்படி அவனைத் தூண்டுகின்றது. ஆனால், ஒரு மகன் கடவுட்டன்மை எய்துகின்ற நிலையிலோ கால்கள் குறைந்து விடுகின்றன. பத்மாசன முதலிய பல ஆசனங்களில் கால்களை வழங்கல் விலக்கப்படுகின்றது. பூசனை செய்யச் செல்லுங்கால் நாம் நிற்கின்றோமில்லை. கீழே உட்கார்ந்து கால்களை உடலின்கீழ் மடக்கி வைத்துக் கொள்கின்றோம். கால்கள் குறைய வேண்டுமென்ற உணர்ச்சி இங்கே உண்டாகின்றது. இதிலிருந்து, கடவுளுக்குக் காலில்லை என்று முடித்தேன்.

(தொடரும்.)

அறிவியற் பகுதி - Science

உளநூல் (Psychology)

[திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.]

(௩௨-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்மையியல் (Personality)

மக்கள் அறிவாலும் ஆற்றலாலும் பல்வேறு படிமுறையில் நிற்பர். தன்மை என்பதொன்றாலும் மாந்தர் வேற்றுமைப்படுவர் என்பது பலரும் அறிந்ததொன்றும். தன்மை என்பது ஆங்கிலத்தில் பேர்ஸனலிடி (Personality) எனப்படும். "இவன், தனக்கு அறிமுகமாவார் யாரையும், தன்பால் ஈர்த்துப் பிணித்துக்கொள்ளும் தன்மையை யுடையவன்" எனவும், "இவன், தன்னை அறிந்தவர்களை, இவனைவிட அவர்கள் எவ்வாற்றானும் தாழ்ந்தவர்கள் என அவர்களே நினைக்குமாறு, வெறும் தோற்றத்தானேயும், செய்யும் தன்மையுள்ளவன்" எனவும்; "இவன் உண்மையில் சிறிதும் சிறப்பிலனாயினும் சென்றவிடமெல்லாம் சிறப்பாகக் கருதப்படற்கு உரிய தன்மையை யுடையவன்" எனவும்; "இவன் அலுவற்சாலையில் கடைப்படியில் இருப்பவனேயாயினும் மிக்குயர்ந்தபடியிலுள்ளாரும் இவனை நச்சும்படி நிற்கும் தன்மையுள்ளவன்" "எனவும்; முதன்முறை காணும் பொழுதே இவள் கற்புடையாள் எனப்பிறர் அறிதற்குரிய தன்மை இவள்பால் விளங்குகின்றது" எனவும்; "இவனைக் கண்டவுடனே இவன்றன் கல்வியினையாதல் நற்பண்பினையாதல் அறிதற்கும் நினையாமல் இவன் வெறுக்கத்தக்கவன் எனப்பிறர் எண்ணுதற்குரிய தன்மையை யுடையவன் இவன்" எனவும்; "எத்துணை அன்புடனாயினும் குழவிகளை அழைப்பினும் குழவிகள் இவனை விரும்பி அணுகாமைக்குரிய தன்மையுள்ளவன் இவன்" எனவும் வழக்காற்றிலுள்ள பொது மாற்றங்களை நாம் மிகுதியும் கேள்விவாயிலாக அறிந்திருக்கின்றோம்.

மேற்சென்ற எடுத்துக் காட்டுக்களில் கூறப்பட்ட தன்மையே ஆங்கிலத்தில் பேர்ஸனலிடி எனப்படுவது. இத் தன்மையின் ஒருவகையே இக்காலத் தமிழ்நாட்டு வழக்காற்றில் முகராசி எனப்படுகின்றது. "திருவுடை மன்னரைக் காணிற்றிருமாலைக் கண்டேனே யென்னும்" என்றவிடத்தும், திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்" என்னும் திருக்கோவையார் உரையிடத்துக் கூறப்பட்ட திரு வென்பது தன்

மையின் உயர்வெல்லையாம். (*Thiru* is the culmination of *Personality*.) திருவாளன் என்னும் இறைப்பெயரும் நிறைந்த தன்மையினைக் (Absolute Personality) காட்டுவதேயாம். (The word *Thiruvalan* signifies the *Absoluteness of Personality* inherent in *God-Hood*) திருக்கோவையார் உரையாசிரியரும் திருவையும் தன்மையையும் இயைத்துக் கூறியது எங் கொள்கையை வலியுறுத்துகின்றது.

மேற்சென்ற எடுத்துக் காட்டுக்களில் உள்ள தன்மையின் வகைகளைத் திரட்டி அறியின் தன்மையின் ஆக்கம் சிறிது புலனாம். இன்சொல்லாடல், பணிவு, பயனில மொழியாமை, பெரியாரைச் சார்ந்தொழுகல், அமைந்த உள்ள வியல்பு, வணங்கிய வாய்மை, நுணங்கிய கேள்வி, இன் முகத்தொடு கூடல் என்பனவும் பிறவும் தன்மை யாக்கத்தின் பகுதிகளாம். ஆயின் மீக் கூறப்பட்டவை யாவும் ஒழுக்கத்தின் பாற்பட்டவை யாதலின் ஒழுக்கமுடைமையே தன்மையுடைமையாம் எனக் கூறலமையாதோ வெனின், சிறிதே அமையுமன்றி முழுவதும் அமையாதென்பதே துணிபு. என்னை? தன்மை யென்பது நற்பண்புகளையாதல் தீய பண்புகளையாதல் தன்னுள் கொண்டிருத்தலன்றியும், அவையிற்றின் வேறாய், பிரித்தறிதற் கியலாத ஒரு சிறப்பையும் உடைத்தாயிருக்கின்றது. ஒருவற்குப் பல நற்பண்புகளிருந்தும் அவனைக் கண்டவுடனே இவன் வன்றன்மை (Forceful Personality) உடையான் என்றுதல், இவன் இன்றன்மை (Pleasing Personality) உடையான் என்றுதல், இவன் அச்சந்தரும் தன்மை (Awe-inspiring Personality) உடையான் என்றுதல் துணிந்து கூற இயல்வதில்லை. எனவே, ஈண்டு, வெறும் பண்புக் கூட்டமே தன்மை யாக்கமாம் எனத்துணிதல் ஏற்புடைத்தன்று. ஆயின் தன்மையின் சிறப்பியல்புதானியாதோ வெனின், அது கலையாராய்ச்சி அறிவிற்குப் புலனாகாத, நுகர்ச்சியினுக்கே (Experience) புலனாம் ஒன்றும் எனவே கூறல் வேண்டும். மேனாட்டு உளநூற் புலவர்கள் நுண் பொருள்களையும் பருப்பொருள்களால் அறிய விழையும் இயல்பினராதலின், நுகர்ச்சியின் பாற்பட்டவைகளையும் அறிவின் பாற்படுத்தி ஆராய்ந்தறிய விழைபவராதலின், தன்மையின் இயல்பை ஒருவாறு துணிந்துள்ளார்கள். அஃதாவது, ஒருவனுடைய ஒழுக்க முறைகள் அவனிடத்துள்ள எச் சிறப்பினைச் சார்ந்து நிற்கின்றவோ அச் சிறப்பாந் தன்மையே தன்மை யெனப்படும், என்பது. ஒருவனுடைய தன்மையைத் துணியவேண்டின், அவன் பல காலத்தும் பல விடத்தும் ஒழுகின முறைகளை யெல்லாம் ஓர்ந்தே துணியவேண்டும் என்பது உளநூற் புலவர் தம் கொள்கையாம்.

தன்மையின் ஆக்கம் (Factors in Personality)

1. ஒருவனது உடலமைப்பு (physique) அவன்றன் தன்மையின் ஒருறுப்பாம். உடற்பருமை யுள்ளாரைக் குடும்பத் திருவினைக் கருவினைக் காலங்களில் (on auspicious and inauspicious ceremonial occasions) நம்மவரில் பலர் மிகு மதிப்பைப் புலப்படுத்தி வரவேற்பது கண்கூடு. ஆகலான் உடலமைப்பின் உண்மை, தன்மை யாக்கத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவது புலனாகின்றது.

சோடில்லை மேல்வெள்ளைச் சொக்காயில்லைநல்ல சோமனில்லை
பாடில்லை கையிற் பணமில்லை தேகப்பருமனில்லை
வீடில்லை யாதொரு வீறுப்புமில்லை விவாகமது
நாடில்லை நீநெஞ்சமே யெந்தவாறினி நண்ணுவையே.

என்னும் செய்யுளில் அருட்பேரொளி வள்ளலார், தேகப் பருமன் இல்லை என்றதும் ஈண்டு உன்னற்பாலது. உடற்பருமை யுள்ளானைப் பலரும் மதித்தலின், அவன் அவர்களிடத்தே இன் சொல் ஆடி கேளிக்கையாகவும் அளவளாவுகின்றான். ஆயின் மெல்லிய கவர்ச்சி யில்லா உடலினன் ஒருவன் பலராலும் நன்கு மதிக்கப்படானாதலின் அவன் அவர்கள்மாட்டுத் தன் உயர்வு தோற்றுவித்தாதல் தாழ்வு தோற்றுவித்தாதல் பழக வேண்டியவனாகின்றான். எனவே, இவன்றன் தன்மை முன்னவன் தன்மையின் வேறுபட்டதாகின்றது. ஆகலான் உடலமைப்பால் தன்மையாக்கம் ஒரு வகையான் நிலைபெறெய்துகின்றது என்பது துணிபு. நிறைந்த கல்வி யறிவுள்ளவன் ஒருவன் உடற்குறளினனாகி விருக்கின்றானாதலின், யாவரும் அவனைப் பொருட்படுத்தி மதிப்பதில்லை. எனவே, அவர்கள்மாட்டு அவனுக்கு எழும் மெய்ப்பாடுகள் அவனை விரைவில் கடுஞ் சொல்லனாகவும், கொடுஞ் சீற்றத்தனாகவும், அன்பிலா நெஞ்சினனாகவும் மாற்றிவிடுகின்றன. ஆகலான் அவனது தன்மை பெரும் மாற்றத்தினை யெய்துகின்றது. அவனே உடற்பருமையனாகவும், உடற்கட்டுடையனாகவும் இருந்திருப்பின், பலரும் அவனை மதித்தலாலும், அவனுக்கு அடங்கி நிற்றலாலும் அவனகத்தே யெழும் மெய்ப்பாடுகள் அவனை வன்றன்மையனாகவும், (Forceful Personality) அச்சந்தரும் தன்மையனாகவும் (Awe-inspiring Personality) நிலைப்படுத்தியிருக்கும்.

2. ஒருவனது மீப்பண்பு (temperament) என்பதும் அவன்றன் தன்மையின் ஒருறுப்பாம். சிலர் பல நற்பண்புகளையுடையராயிருப்பர். ஆனால் அவர் விரைவிற் சினங்கொள்ளும் இயல்பினராகவும் இருப்பர். இவ்விரைவிற் சினங்கொள்ளுமியல்பே ஈண்டு அவர்தம் மீப்பண்பு எனப்படுவது. சிலர், தம் வாழ்க்கையில் துன்பங்களையே நுகர்வாராயிருப்பினும் என்றும் இன்சொல்லாடல் என்னும் மீப்பண்பினை யுடையராயிருப்பர். சிலர் தம் வாழ்க்கையில் இன்பங்களையே நுகர்வாராயிருப்பினும் என்றும் உளச்சோர்வு (Melancholy) என்னும் மீப்பண்பினை யுடையவராயிருப்பர். அன்றியும், ஆப்டிமிஸ்டிக் டெம்பரமெண்ட் (Optimistic temperament) எனவும், பெஸ்ஸிமிஸ்டிக் டெம்பரமெண்ட் (Pessimistic temperament) எனவும் பேசப்படும் உளமீதூர்வு மீப்பண்பு, உளஅயர்வு மீப்பண்பு என்னும் மீப்பண்புகளும் உள.

பழைய உளநூற் புலவர்கள் மீப்பண்புகளையும் மகனின் உடலிலுள்ள சில நீர்ப்பொருள்களையும் தொடர்புடையனவாகக் கருதியிருந்தனர். குருதி (Blood) மிகுதியாகவுள்ளவர்கள் துன்புறுத்தும் மீப்பண்பினர்கள் (Individuals with a *Sanguine temperament*) எனவும், பித்தநீர் மிகுதியாகவுள்ளவர் சினமீப்பண்பை (Choleric temperament) உடையவர்கள் எனவும், சளிநீர் மிகுதியாக வுள்ளவர்கள் கூச்சம் என்னும் மீப்பண்பை (Bashfulness or Phlegmatic temperament) உடையவர்கள் எனவும், மண்ணீரலின் நீர்ப்பொருளை மிகுதியாகப் பெற்றுள்ளவர்கள் உளச்சோர்வு (Melancholic temperament) என்னும் மீப்பண்பை யுடையவர்கள் எனவும் அவர்கள் கருதியிருந்தனர். நந்தமிழ்நாட்டுத் தனிமருத்துவர்தம் கொள்கைகளும் ஈண்டு உன்னற்பாலன. கோழை (சளி அல்லது ஸிலேஷ்மம்) உடலினன் தன்மைகளைக் கூறவந்த தேரையர், "அறம்பொறை நாணம் மத்திய ஞாபகம்" எனக் கூறுமாற்றால் சளிநீருடையான் கூச்சம் என்னும் மீப்பண்பினை உடையான் எனத் தெரிந்திருக்கின்றமையும், "போதவே கோபமுள்ளே பொருமினால் நாடி பித்தம்" என அகத்தியர் தம் இரத்தினச் சுருக்கத்தில் கூறுமாற்றான், 'பித்தநீர் மிக்குடையான் சினமெனும் மீப்பண்பை உடையான் எனத் தெரித்திருக்கின்றமையும், ப்லீகம் (spleen) மலத்தை யிறுகி மந்திக்கும்" என அகத்தியர்தம் சாம்பிரதாய வைத்தியம் என்னும் நூலில் கூறுமாற்றால், மண்ணீரலில் நீர்ப்பொருள் மந்தம் என்னும் உளச்சோர்வாம் மீப்பண்பினைத் தோற்றுவிக்கும் எனத் தெரிந்திருக்கின்றமையும் நாம் அறியத் தக்கன.

இக் கால உளநூற்புலவர் சிலர் மீப்பண்புகளுக்கும், எண்டோகிரைன் கிளாண்ட்ஸ் (Endocrine glands) என்னும் உட்சுரப்புறுப்புக்களின் நீர்ப்பொருள்களுக்கும் தொடர்பைக் கற்பிக்கின்றனர். எடுத்துக் காட்டாகக் கூறுமிடத்து தைராய்ட் (Thyrcid) என்னும் உட்சுரப்புறுப்பு மிகுதியாகச் சுரந்தால் ஒருவனுக்கு முன்கோபம் என்னும் மீப்பண்பு (Irritable temperament) தோன்றும் என்பது அவர் கொள்கை. (தொடரும்)



[MR. T. B. KRISHNASWAMY MUDALIAR, M. A., B. L.]

மதுரைக் கண்ணங்கூத்தனார் இயற்றிய

கார் நாற்பது

(௩௬-ம் பக்கத் தொடர்ச்சி.)

புணர்தரு செல்வந் தருபாக்குச் சென்றார்
வணரொலி யைம்பாலாய் வல்வருதல் கூறும்
அணர்த்தெழு பாம்பின் றலைபோற் புணர்கோடல்
பூங்குலை யீன்ற புறவு. (௧௧)

O thou with curled and abundant locks of hair, the forests with their bunches of white *kandal* rising up like a snake's hood, declare the speedy return of him who went forth to seek a fortune to be of help here and hereafter. (11)

மையெழி லுண்கண் மயிலன்ன சாயலாய்
ஐயந்தீர் காட்சி யவர்வருத றிண்ணிதாம்
நெய்யணி குஞ்சரம் போல விருங்கொண்மூ
வைகலு மேரும் வலம். (௧௨)

Daily the clouds black as elephants oiled, roll towards the night; and so O thou, whose dark and beautiful eyes have fed on collyrium and who thyself resemblest the pea-fowl in beauty, surely he cometh back, thy clear-brained Lord. (12)

ஏந்தெழி லல்குலா யேமார்ந்த காதலர்
கூந்தல் வனப்பிற் பெயறாழ—வேந்தர்
களிறெறி வாளரவம் போலக்கண் வெளவி
ஒளிறுபு மின்னு மழை. ௧௩

O thou lovely one, the rain falls in loveliness like to the long locks of women who have enjoyed all happiness with their husbands; like to the sword flung by kings on opposing war-elephants are the sound of rain and the flash of lightning. (13)

செல்வந் தரல்வேண்டிச் சென்றநங் காதலர்
வல்லே வருத றெளிந்தாம் வயங்கிழாய்
முல்லை யிலங்கெயி றீன நறுந்தண்கார்
மெல்ல வினிய நகும். ௧௪

O thou that wearest shining ornaments! We have learnt with certainty the speedy return of our lord, who went forth to bring home a fortune, even from the gentle smile of the cool and beautiful clouds, which have drawn forth the *Mullai* buds, that much resemble maidens' teeth. (14)

திருந்திழாய் காதலர் தீர்குவ ரல்லர்
குருந்தின் குவியிணா ருள்ளுறை யாகத்
திருந்தி னிளிவண்டு பாட விருந்தும்பி
இன்குழ லூதும் பொழுது. ௧௫

O wearer of well-shaped ornaments! at this season when beetles sing sweetly in the half-open flowers of the *Kuruntha* and the black beetle sends forth sweet flute-like music, our lord will not be away from us. (15)

கருங்குயில் கையற மாமயி லாலப்
பெருங்கலி வான முரறும்—பெருந்தோள்
செயலை யிளந்தளி ரன்னநின் மேனிப்
பசலை பழங்கண் கொள. ௧௬

The big thunder-clouds roar terribly making koels helpless and unhappy; but the big peacocks dance with mirth. They make feeble the glow of your wide shoulders, soft as the tender leaves of the asoka. (16)

அறைக்க விறுவரைமேற் பாம்பு சவட்டிப்
பறைக்குர லேறொடு பௌவம் பருகி

உறைத்திருள் கூர்ந்தன்று வானம் பிறைத்தகை
கொண்டன்று பேதை நுதல். கஎ

O Innocent! the clouds having drunk of the sea, with thunder-like noise of drums terrify the snakes; and darkening all the sky, pour down their water on the rocks of the neighbouring mountain. Therefore your brow partakes of the quality of the crescent and wanes. (17)

கல்பயில் கானங் கடந்தார் வரவாங்கே
நல்விசை யேறொடு வான நடுநிற்பச்
செல்வர் மனம்போற் கவினீன்ற நல்கூர்ந்தார்
மேனிபோற் புல்லென்ற காடு. கஅ

At the return of him who went past the mountain forest, the clouds much roaring and standing in the centre of the sky have poured rain on all around, until the jungle, lean like beggar's bodies, now shines jubilant as the hearts of the rich. (18)

(வினைமுற்றிய தலைவன் பாகற்குச் சொல்லியது)

நாஞ்சில் வலவ னிறம்போலப் பூஞ்சினைச்
செங்கான் மராஅந் தகைந்தன—பைங்கோற்
றொடிபொலி முன்கையா டோளணையா வேண்டி
நெடுவிடைச் சென்றதென் னெஞ்சு. க௯

THE MAN, WHOSE WORK OF SEEKING A FORTUNE IS FINISHED, SPEAKS.

The white cedar with brown branches, has blossomed white like Parasurama, the hero with the plough-weapon: and hence my heart seeking the shoulders of her who wears bangles on her soft rounded arms, has traversed the length of the forest. (19)

வீறுசால் வேந்தன் வினையு முடிந்தன
ஆறும் பதமினிய வாயின—ஏறோ
டருமணி நாக மனுங்கச் செருமன்னர்
சேனைபோற் செல்லு மழை. உ௰

The wars of the valiant King are over; the ways have become smooth; the clouds march like armies of contending Kings, terrifying with their thunder the gem-bearing snakes, (20)



கறங்கு என்னுங் காற்றுடி

[திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள்]

கறங்கு என்னும் பதம் பழைய தமிழ்ச் செய்யுள்களில் வழக்கப்பட்டு வந்ததொன்று. அதற்குப் பொருள் காற்றுடி சுழற்சி, ஒலி செய்தல் என நிகண்டுகளிலும் அகராதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும், அஃது ஒரு விளையாட்டுக் கருவியாகத் தற்காலத்திலும் நமது சிறுவர்களால் எடுத்தாளப்பட்டு வருகிறதை நாம் பார்க்கலாம். ஆகவே, இக்கருவி ஒரு பண்டைக்காலக் கருவியாக இருந்து இக்காலம் வரை வழங்கி வருகிறது என்று அறியவேண்டும்.

சிறு பிள்ளைகள் இக்கறங்கு என்னும் காற்றுடியை வெகு சுலபமாகச் செய்வார்கள். ஒரு பனை ஓலையை 4 அல்லது 5 அங்குல அளவில் இரண்டு துண்டுகளாகக் கத்தரித்து அவை களின் நடுவில் $\frac{1}{8}$ அங்குல அளவிற்கு ஒரு வட்டமான துளை செய்வார்கள். பிறகு அந்த இரண்டு ஓலை நறுக்குகளையும் குறுக்களவில் வைத்து, துளையில் ஒரு சிறு குச்சியைச் செருகி அந்தக் குச்சியை 4 அங்குலம் நீளமுள்ள ஒரு தட்டுக் குச்சியில் அழுத்தி விடுவார்கள். இவ்விதமாகச் செய்த ஒரு கருவியைக் காற்று வீசும்போது சிறு பிள்ளைகள் அதற்கு எதிரே வைத்துக்கொண்டு நிற்பார்கள். அப்போது காற்றின் விசையால் ஓலைநறுக்குகள் வெகு விரைவாகச் சுழலும். சில பிள்ளைகள் காற்றுவரும் வழியே அக்கருவியைப் பிடித்துக் கொண்டு ஓடுவார்கள். அப்போது இன்னும் விரைவாக அது சுழலும். இவ்வாறு சுழலுகிறதினால் அக்கருவிக்குக் காற்றுடி என்றும் பண்டைக் காலத்தில் கறங்கு என்றும் பெயர் வந்தது. இக்காற்றுடியை ஆகாயத்தில் பறக்க விடும் பட்டம் என்னும் காற்றுடியோடு மயங்கவைக்கக் கூடாது.

நமது பிள்ளைகள் வேறொரு விதமாகவும் கறங்கினைச் செய்வார்கள். நன்றாய் மலர்ந்த பூவரசம் பூவைக் கிள்ளி அதனுடைய காம்பை அரிந்து விடுவார்கள். பிறகு அதன் இதழ்களில் நேர் கோணமாக உள்ள நான்கு அகன்ற இதழ்களை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்றவைகளைக் கிள்ளி எறிந்து விடுவார்கள். அதன்

இரண்டு ஓலை நறுக்குகள் காற்று அடிப்பதனால் வெகு விரைவாகச் சுழல்கின்றன. அதனுடைய வேகம் ஓரே வட்ட ஓலையைப்போல அதனைக் காண்பிக்கும். அது சுற்றுகிற வேகத்தினால் அவ்வோலைகளுக்கு எத்துணை விசை அல்லது சக்தி வந்திருக்கிறது பாருங்கள். இவ்வித சக்தியினால் பல பயன் கொடுக்கத்தக்க கருவிகளையும் செய்யலாம் அல்லவா? கறங்கோலையைப் போலவே பெரிதாகவும் பலமாகவும் தகடுகளைக் கொண்டு ஒரு கறங்கினைச் செய்தால், அதின்மேல் வீசும் காற்றினால் அது விரைவாகச் சுற்றும். அதன் இரிசுக்குக் கயிற்றையோ அல்லது சங்கிலியையோ இணைத்து மறுபக்கத்தில் ஒரு சக்கரத்துடன் இணைத்துவிட்டால், அச்சக்கரமும் விரைவாகச் சுழலும். அதன் மூலமாகப் பலகாரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். இவ்விதமாகச் செய்யப்படும் ஓர் இயந்திரந் தான் காற்று யந்திரம் (Wind Mill) என்பது. காற்று அதிகமாக வீசும்படியான இடமாகிய சுமார் 100 அடி உயரத்தில் சக்கரம்போன்ற ஒரு விசிறியை வைத்துவிட்டால் அது சுழலுவதினாலே ஆழத்திலிருக்கும் தண்ணீரை மேலே இறைக்கமுடியும்; ஆலையில் இருக்கும் தானியங்களை அரைக்க முடியும். இவ்விதம் நீர் எடுக்கும் காற்று இயந்திரங்களை நமது நாட்டிலும் கடற்கரையோரங்களில் பார்க்கலாம். உதாரணமாகக் கன்னியா குமரிக்குச் சென்றவர்கள் இதனைப் பார்த்திருப்பார்கள். தானியம் அரைக்கும் காற்று இயந்திரங்கள் ஹாலண்டு, பெல்ஜியம், இங்கிலாந்து முதலிய நாடுகளில் இருப்பதாக நாம் நூல்களில் வாசித்திருக்கின்றோம்.

இவ்விதக் கருவிகளைக் கொண்டு விசிறிகளையும் செய்வதுண்டு. எடுத்துக்காட்டாக மின்சார விசிறிகளைப் பாருங்கள். காற்றினால் விசிறி ஆடுவதற்குப் பதிலாக விசிறி சுழல்வதினால் காற்று அடிக்கும்; ஆகவே, இதனுடைய தத்துவம் எதிர் முறையான தத்துவமாகும். இவ்வித எதிர்முறைத் தத்துவத்தைக் கொண்டு வேறுவித இயந்திரங்களையும் கண்டுபிடித்திருக்கின்றார்கள். அவைகளை உந்து வண்டிகளிலும் ஆகாய விமானங்களிலும் காணலாம். அவைகளுக்கு முன்னால் பலமான விசிறிகள் வைத்திருப்பார்கள். அவை சுழல்வதினால் காற்றினை இழுத்துவிடுகின்றன. அதனாலே முன்னால் இருக்கும் காற்றானது குறையவே வாகனத்தை முன் செலுத்துகிறது. ஆகவே ஒரு தாழ்ந்த விளையாட்டுக் கருவியினால் எத்துணைச் சிறந்த தத்துவங்களைக் கண்டு பிடித்திருக்கின்றார்கள் பாருங்கள்!

மகளிர் பகுதி

கியூரி அம்மையார்*

(கதிரி கண்ட மதிமிகு மங்கை)

[திரு. கு. ஞானசம்பந்தம்]

முகப்புப் படம் பார்க்க.

பொருள்நூல்களை நுண்ணறிவு கொண்டு செவ்விய முறையில் ஆராய்ந்து பயன் வழியும் அரும்பெரும் பொருள்களைக் கண்டு நம்மனோர்க்கீந்து புகழும் நலமும் பெற்று நிலவிய மங்கையர் மணியாம் கியூரி யம்மையாரை ஆ! நம் நிலவுலகம் இனி என்று காணப்போகிறது! அறிவியலுலகம் என்னும் நாகம் கியூரியம்மை என்னும் அருமணியை இழந்து தவிக்கின்றதே! என்னே அவ்வம்மையின் அறிவியல் நுண்ணறிவு!

கியூரி அம்மையார் 1867-ம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 7-ம் நாளில் போலந்து நாட்டின் அணிநகராக விளங்கும் வார்சா என்னும் நகரில், டாக்டர் ஸ்க்லோடாஸ்கா என்னும் பேராசிரியர்க்குப் புதல்வியாராகத் தோன்றியவர். தந்தையார் நுண்பொருளாராய்ச்சியில் வல்லுநராகலின், புதல்வியாரும் தமது இளம்போதிலே தந்தையாரிடமிருந்து அறிவியற் (Science) புலமை பெறுவாராயினார்.

சில்லாண்டுகட்குப் பின்னர், தம் தாய்நாடு விட்டுப் பாரிஸ் (Paris) நகரஞ் சேர்ந்து சோர்போன் (Sorbonne) என்னும் பல்கலைக் கழகத்தே மேற்கல்வி பயிலத் தொடங்கினார். அதன் பின்பு சேவ்ரீ (Sevres) நகரில் மகளிர் கல்லூரியாகிய எகோல் நார்மேலில் (Ecole Normale) விரிவுரையாளராய் அமர்ந்து தம் கடமையை ஆற்றினர். அதுகாலை பாரிஸ் அணிநகரில் வாழ்ந்த ஆசிரியர் பியரி கியூரி (Pro. Pierre Curie) என்னும் ஆண்டகையரோடு நட்புக்கொண்டு அவரே தம் கருத்திற்கும், நடைக்கும் இசைந்தவரெனக் கண்டமையால் அவரையே தமக்குக் கணவராகக்கொண்டு அவரோடு இன்புற்று வாழ்ந்துவந்தார். இருவரும் காதலரன்றி ஆசிரியராகவே அமைந்தமையால், இவர் தம் விரிவுரைக் கடமைக்குச் செலுத்தும் பொழுதுபோக எஞ்சிய வேளைகளில் நுண்பொருள் ஆராய்ச்சியிற் றலைப்பட்டுப் புதுமைகளைக் காண்டலிற் கண்ணுங் கருத்துமாயினார்.

* Madame Marya Curie.

ஐம்பெரும் பொருள்களான முதற் பொருள்களின் நுண்மைகளை ஆராய்வதே அவர்தம் செயல் என்றோமன்றோ! இவ்வைம்பொருளியக்கத்தில் வேறு பல அரிய பொருளியக்கங்கள் மிக நுண்மையாக உளவென அவர்கள் கண்டனர். அது 'கதிரி இயக்கம்' அல்லது ரேடியோ ஆக்டிவிடி (Radio Activity) என்னும் நுண் செயலாகும்.

இஃதிங்ஙனமாக, இராட்சன் என்பார் கண்டுபிடித்த நுண்ணுழை கதிர் (X-Rays)களுக்கு ஒப்பாக நுழைய இயலாத இடங்களின் வழியாகவும் நுழைந்து ஒளிதரும் ஆற்றல் ஒன்று, நிறத்திலும், ஒளியிலும் இரும்பை யொத்திலங்கும் ஒருவகைக் கனிப்பொருள்களின் (உலோகம்) கூட்டுப் பொருளில் (Uranium Compounds) இருப்பதாக ஆசிரியர் ஹென்ரி பெஅக்கெரல் (Prof. Henry Becquerel) என்பாரால் 1896-ம் ஆண்டிற் கண்டுபிடிக்கப் பெற்றது. இதை அடிப்படையாகக் கொண்டு கூரிய மதிவாய்ந்த கியூரி அம்மையார், யுரானியம் கிடைக்கப் பெறுகின்ற கனிப் பொருள்களுக்கு ரேடியோ ஆக்டிவிடி என்னும் கதிரி இயக்கத்தின் தன்மை போன்ற இயக்கம் (உள்ளீடாக) இருக்கிறதா என்று கண்டறியும் பொருட்டுத் தம் கணவரோடு இருந்து ஆழ்ந்து ஆராய்ச்சி செய்யலுற்றனர். நீண்ட ஆராய்ச்சியின் பயன் அவரையே வியப்புக்குள்ளாக்கும்படி நன்மை தந்தது. கனிவகைகளினின்றும் பெறக்கூடிய யுரானியத்திற் கிருக்கும் வன்மையைக் காட்டிலும், நான்கு அல்லது ஐந்து மடங்கு வன்மை அக்கனி வகைகட்கே யுளதெனக் கண்டுபிடித்தார் அம்மையார். மேலும், அவர் யுரானியத்திற் குளதாகும் ஒளி வீசும் ஆற்றல் சிற்றணு (Atom) வைச் சேர்ந்தது எனவும், அவ்வாற்றல் கூட்டணு (Mole cule) வைச் சேர்ந்ததன்று எனவும் செயலால் மெய்ப்பித்து விளக்கிக் காட்டினர். ஆகவே முன்னர்க் கண்ட யுரானியம் என்னும் கதிர்ப் பொருளைக் காட்டிலும் வன்மை மிக்க ஒளி கனிப்பொருள் வகைகளிற் கிடைக்கப் பெறுவதைப் பொருளாராய்ச்சி வழியாகச் செயலில் நன்கு தெளிந்து அதன் அளவினைக் காண்டற்கு அவ் வம்மையார் 1898-ம் ஆண்டினில் தமது கணவரின் உதவி கொண்டு துணிவோடு அக்கனிப் பொருள்களின் வகைகளினின்றும் யுரானியத்தைக் காட்டிலும் வன்மை மிகுந்த ஒளியாற்றலை வேறு பிரித்தறியத் தொடங்கினர். முடிவில் இந்நுண் முயற்சி முழு வெற்றி யடைந்தது. ஆராயத் தொடங்கிய இரண்டு கிழமைகட்குள்ளாகவே அவ்வம்மையார் அக்கனிப் பொருளிற் பேராற்றல் மிக்க இருபொருள்கள் இலங்குவதாக நுனித்துக் கண்டுமகிழ்ந்தார். அப்பொருள்களில் ஒன்றுக்குத் தம் தாய்நாட்டு நன்றி காரணமாக அந்நாட்டுப் பெயரையே 'பொலோனியம்' என

இட்டார்; மற்றொன்றினுக்கு 'ரேடியம்' என வைத்தார். உலோகப் பொருளாகிய கனிப்பொருளில் இவ்விரு நுண்ணூற்றற் பொருள்களும் மிகச் சிறிய பகுதிகளாகவே இருக்கின்றன. ஆயின், இப்பொருள்களின் ஆற்றலோ கணக்கி லடங்கியதன்று! இத்தகைய நுண்மையில், இவ்வளவு பேராற்றலை வைத்த இறைவனின் பேரருட்டிறத்திற்கு நாம் ஆற்றும் நன்றி யாதுளது! ரேடியம் என்னும் கதிரியில் யுரானியத்திலிருப்பதைக் காட்டினும் 10,00,000 மடங்கு கதிரியியக்கம் (Radio-Activity) உளதா என்பது தெரியவில்லை.

இத்தகைய நுண் ஆற்றலைக் கண்டறிந்த பின்னர் ரேடியம் என்னும் கதிர்ப் பொருளின் மருத்துவ (ராசாயன) ஆற்றலைச் சோதித் தறிதற்கும் மிகுந்த கதிர்ப் பொருள் (Radium) தேவையாக இருந்தது. கியூரி அம்மையார் மிக்க ஏழ்மை நிலையிலிருந்தமையால் தமக்குத் தேவையான அத்துணை மிகுந்த கனிப் பொருள்களை எங்ஙனம் பெறல் கூடும்! இது கண்ட ஆஸ்ட்ரிய அரசினர் தங்கள் கனிகளினின்றும் கியூரி யம்மையார்க்குத் தேவையான அளவு கதிரி (Radium) நிறைந்த கூட்டுப் பொருள்களைத் தந்து உதவினர்.

தமக்குக் கிடைத்த கூட்டுப் பொருள்(Minerals)களைக் கொண்டு சில ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்ததன் பயனாக, முடிவில் ஒரு பவுண்டு கூட்டுப் பொருளில் எழுபதினாயிரத்தில் ஒரு பங்கு ரேடியம் குளோரேட் என்னும் கதிரியைப் பிரித்து எடுத்தார். அதன் பின்னர்ப் பொருட் சேர்வின் இயல் நலங்களையும் மருத்துவ இயல்களையும்பற்றி ஆராய்ச்சி செய்யத் தொடங்கினர். அக் கதிரிக்கு ஒரு குறிப்பிட்ட எடையும், கணக்கான ஒளியும் இருப்பதாக உணர்ந்தார் அம்மையார்; இவ்வாறு தொடர்ந்து ஆராய்ந்தபின், கதிரி இயக்கத்தை மிகுதியாகக் கொண்டுள்ள ரேடியம் என்னும் கதிரி ஒரு தனித்த மண்பொருள் எனக் கண்டு தெளிந்தார். மேலும், 1910-ம் ஆண்டில் கியூரி அம்மையார் கனிப் பொருள்களைப் (Metal) பிரித்து ஒவ்வொன்றின் தன்மைகளையும் நன்காராய்ச்சி செய்தார்.

கதிரி (Radium) ஆராய்ச்சிக்குப்பின் தாம் முதலிற் கண்டுபிடித்த பொலோனியம் (Polonium) என்னும் மற்றொரு கதிர்ப் பொருளைப் பிரித்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அம்மையார் அத்துடன் பொலோனியம் ஈயமாக மாறும் இயல்புடையதா எனவும் ஆராயத் தொடங்கினர். நாளடைவில் அப் பொருள் ஈயமாக மாறும் என்னும் உண்மையை நிலைநாட்டப் பல ஆதாரவுகள் கிடைத்தன. ஆயின், கருநிறமுள்ள 1 டன் யுரானியம் ஆக்ஸைடி (Uranium oxide) லிருந்து காற்குன்றிமணி யளவு (1 Milli-Gram)ள்ள தூய பொலோனியக் கதிரி எடுக்கப்பட

முடிவதால் அவ்வுண்மையைத் திண்ணமாக மெய்ப்பிப்பது இய லாமை யாயிற்று.

மணம் புரிந்து கொண்ட காலத்திற் கியூரி யம்மையாரும் அவரது காதலரும் மிகவும் எளியவரா யிருந்தமையின் பெருந் துன்பத்துக் கிடையிலேயே தங்கள் அரும் பொருளாராய்ச் சியை நடாத்திவந்தனர். ஆயின், அவர்கள் ஆராய்ச்சியின் பயன் மலையினும் பெரிதாகலின் பட்ட துன்பங்களையும் நேர்ந்த இடுக் கண்களையும் மறைத்துப் பெருமையையும், புகழையும் தந்தது.

இதற்கிடையில் கியூரி அம்மையாரின் கணவனார் கோரமான நிலையில் 1906-ல் உயிர் துறந்தனர். ஆயினும், அம்மையார் சிறி தும் முயற்சி கைவிடாதாராகி இருந்தார். உடனே இவரது அரிய ஆராய்ச்சியின் காரணமாகப் பாரிஸ் அணிநகரத்தே பல் கலைக் கழகத்து விரிவுரை யாளராய் அம்மையார் தேர்ந்தெடுக்கப் பட்டார். அச்சமயம் தமக்குத் துணைபுரியப் பல அறிஞரிருந் தமையாலே தமது அறிவாராய்ச்சியை யாதொரு முட்டும் இன்றி நடாத்திவரலாயினர். மேலும், இக்கதிரியியக்கத்தைப் (Radio Activity) பற்றிய ஆராய்ச்சி செய்வதற் கெனவே இவர் ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவி அதன் வழியாகத் தமது ஆய்வுக் கூடத்(Laboratory) திற்குப் பல உதவிச் செயலாளரையும் சேர்த்தார்,

இவர் பருப் பொருள்களின் நுண்ணுற்றலை ஆராய்ச்சி செய் வதில் மிக்க வல்லமை பெற்றவர்; மிக விழிப்பாகவும், உன்னிப் பாகவுமே தமது ஆராய்ச்சியை முடிக்க வல்லவர்; சலியா வுழைப் பும், முயற்சியு முடையவர். தாம் கண்ட பருப் பொருளா ராய்ச்சியிலே குன்றாத ஊக்கத்துடன் மிகக் கருத்தூன்றி யிருந்த மையால் அம்மையார் பற்பல காலங்களில் உடல் நலங் குன்றி னார். அவரது ஆராய்ச்சித்திறன் அறிஞர் எல்லாராலும் போற் றிப் புகழப்பட்டது. 1904-ஆம் ஆண்டைய ஆய்வினர் பரிசை (Nobel prize) ஆசிரியர் ஹென்றி பெக்கெரல் (Prof. Henry Becquerel) என்பார்க்கும், கியூரி அம்மையார்க்கும் அவர் தம் கணவனார்க்கும் பகிர்ந்தளித்து ஊக்கம் தந்தனர். (தொடரும்)

சிவஞானபோதக் கருத்து

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௫௩	௰	யொன்றே.	யொன்றே
,,	௰௫	யெனவும்	யெனவும்,
,,	௨௧	சிவன்	சிவன்,
௫௫	௩௪	சர்வபூத்தமணி	சர்வபூததமணி
௫௬	௰௩	வேறுபாடுகளுள்.	வேறுபாடுகளுள.

செய்திகளும் குறிப்புகளும்
News and Notes

கடந்த முப்பது ஆண்டுகளாக இல்லாத கடிய விசையுடன் கூடிய டைஃபூன் என்னுங் கடும்புயலும் கடற்பொங்கலும் சென்ற செப்டம்பர் 21-ம் நாளன்று மத்திய ஜப்பானில் உண்டா யின. கணக்கற்ற உயிர்கள் சேதமடைந்தன. மட்டற்ற பொருள்கள் அழிந்தன. ஓசாக்கா நகரம் உருவின்றி யழிந்தது. பாழடைந்த பொருளின் மதிப்பு 50 கோடி யென் ஆகும்.

*　　*　　*

நம் மன்னர் ஐந்தாம் ஜார்ஜின் மகனான ஜார்ஜ் இளவரச ருக்கும் கிரேக்க நாட்டு இளவரசியான மெரீனா என்பாருக்கும் வரும் நவம்பர் 29-ம் நாள் திருமணம் நடப்பதென்று முடிவு செய்துள்ளார்கள்.

*　　*　　*

இந்து மதம் ஒரு புழுத்த மதமென்றும், இந்தியர்கள் அழுக்கும் முடைநாற்றமும் நிறைந்த மக்கள் என்றும், இந்திய அரசர்களிற் பலர் வறுமைமிகுந்த கயவர்கள் என்றும் "ஸண்டே டிஸ்பாட்ச்" என்ற ஆங்கில வாரத்தாளின் எழுத்தாளர் ஒருவர் வரைந்துள்ளார். ஆறே வாரங்கள் இந்தியாவில் தங்கியிருந்து இத்தகைய கொடுங்கூற்றை யெழுதியவர்தம் திமிர் இருந்தவா றென்னே! எவ்விதிக்கும் விலக்கொன் றிருப்பதுபோல் ஆங்கிலக் குழுவினருக்கு இவர் ஒரு விலக்குபோலும்.

*　　*　　*

முகத்திற்கு நறுமாப் பூசிக்கொள்வதால் சிலர்க்கு விடாச் சளி பிடித்துக் கொள்கின்றதாம்.

*　　*　　*

வயது வந்த ஒருவனுடைய தொடை என்பின்மேல் ஒன் றரை டன் எடையுள்ள ஒரு பொருளை வைத்தாலும் அது முறிந்து போகாமல் தாங்கிக் கொள்ளுமாம்.

*　　*　　*

இன்னும் சில நாட்களில் அமெரிக்கக் கூட்டு மாகாடுகளி லிருந்து ஓர் ஆராய்ச்சிக் குழுவினர் இந்தியாவிற்கு வரப்போகி றார்களாம். அவர்கள் சிந்துநதிக் கரையிலும் லார்க்கானா கராச்சி முதலிய இடங்களிலும் அகழ்ந்து தோண்டி ஆராயப் போகிறார்களாம். அங்கே கிடைக்கக்கூடும் என்று அவர்கள் கருதி யுள்ள பொருள்கள் மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களிற் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களைவிடப் பழமையில் மிகுந்தவையாம்.

சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்பு அலுவற்கூட மேற்பார்வை யாளராயிருந்த திருவாளர் வி. எஸ். சுவாமிநாத முதலியார் அவர்கள் திடுமெனச் சென்ற 6-ம் நாள் சனியன்று இறந்தமையறிந்து பெரிதும் வருந்துகிறோம்.

* * *

கூட்டுறவுத்துறை டிப்டி ரெஜிஸ்ட்ராராயிருந்து உதவிச் சம்பளம் பெற்றுவரும் திரு. செ. தெ. நாயகம் அவர்களின் மூத்த மகனார் திரு. செ. நெ. நாயகம் அவர்கள் ராக்ஃபெல்லர் மாணவனாக அமெரிக்காவிற்கு மேற்கல்வி பயிலச் செல்லும் போது அவருடன் சென்ற அவர் மனைவியார் திருமதி மகா லெட்சுமி யம்மை மார்சேலில் இறந்துபட்டது மிகவும் இரங்கற் குரியதாம்.

மதிப்புரை

நவீன தர்க்கம் :—அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு திரு. கே. ஆர். அப்பாசாரியரால் எழுதப்பட்டது.

ஏனைய பல மொழிகளிலுமுள்ள புதுக் கருத்துக்களையும், கலை யறிவுகளையும் தமிழின்கண் மொழிபெயர்த்து மொழியை வளம்படுத்தல் இஞ்ஞான்று வேண்டப்படும் திருத்தங்களுள் சாலச் சிறந்ததொன்றாம். இக் கருத்துடன் அண்ணாமலைப் பல்கழகத்தார் தர்க்கம் என்ற அளவை நூலை முதன்முதலாகத் தமிழில் மொழிபெயர்த் தெழுதுவித்து அச்சிட்டிருக்கின்றனர். அப் பல்கலைக் கழகத்தார்தம் முயற்சி மிகவும் போற்றத்தக்க தொன்றாம். ஆசிரியருக்கு ஆயிரம் வெண் பொற்காசு பரிசளிக் கப்பட்டமை யாவரு மறிந்ததே. "நவீனம்" என்று நூலுக்குக் கொடுத்த அடைமொழி அத்துணைப் பொருத்த முடையதாகத் தோற்றவில்லை. நூலின்கண்ணும் மொழிபெயர்த்துள்ள மரபுச் சொற்களும் பெரும்பான்மையும் வடமொழிகளாகவே இருக் கின்றமை வருந்தத் தக்கது. மற்றபடி நூல் மிகவும் அழகுட னும் சீருடனும் அச்சிடப்பட்டுள்ளது.

சருவசன சேபம் : இராவ் சாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் இயற்றியது. விலை ஓரணா. சமரசக் கொள்கை பரவிவரு மிக்காலத்தில் இத்தகைய பொது நூல் ஒன்றை யெழுதி வெளியிட்ட ஆசிரியரைப் போற்றுகிறோம்.

ஆ - பெண்மரை

பெயர்ச்சொல்

முற்கூறிய இரண்டும், இனத்துக்கும் மக்கட்கும் ஆவதாய் நாட்டுக்குள் வாழும் ஆவினம். இத்தன்மையாகவே காட்டினுள் தவம்பூண் டொழுகுவோர்க்குப் பசுவைப்போலவே ஆவதாக அமைதலின், ஆ—பெண்மரை எனக் கொள்ளலாயிற்று.

ஆ - என்பது [அ + அ = ஆ] அவ்வெண்ணம் அப்படியா? அதுவா அவ்வெண்ணம்? அதுவே ஆவது! அப்படித்தான் ஆகத்தக்கது! என இவ்வாறு பல நிலைமையிலும், பழமை அன்று, புதுமை, புதுமை! எனக் கொள்ள வியப்பை விளைத்து நிற்றலின், வியப்புப்பொருளைத் தரும் இடைச்சொல்லாயிற்று. —ஆ என்பது எதிர்மறையில், நடவா, செய்யா, என்பதில் நடத் தல் செய்தல் என்னுமுடம்பாட்டை நீத்துப் புதுநிலையாகிய எதிர்மறையிலாதலின், எதிர்மறையின் ஈரெச்சம், பலவின்பால் எதிர்மறை முற்று இவ்வகை விகுதி யுருபிடைச் சொல்லாயிற்று. உடம்பாட்டுச் செய்யா என்னும் வினையெச்சத்தில், 'அந்நிலை யிலாய்' என விகுதியாயிற்று. ஆ என்னும் வினாவிடைச்சொல் 'அச்சுட்டுத்தானா?' எனல் குறிநிலை என்க.

கா - காவல்செய்

வினைச்சொல் - ஏவல்

[க் + ஆ—கா]. கா = காவல் ஆகு. ககரம் தொடவும், படவும் தக்க நிலைமையிலுள்ள வடிவுடைய பொருள் - ஆ வென்பது ஆகுதலைக்கொள் - எனவே, தொடவும் படவும் தக்க நிலைமையிலுள்ள ஓர் வடிவுடைய பொருளில், தன் உள் எண்ண மும் நிறைவேற்றும் தொழிற்பாடும் ஆகுதலைக்கொள், (அத னைக் காத்திரு) என அமையும். ஆதலால், காவென்னேவல் தன்னுட் கொண்டெழும்பும், ஆவென்னும் 'செய்பொருளில் வினை' போலாகாது, 'செய்பொருள் குன்றுவினை'யாகவே நிற் கும். க - தொடவும் படவும் நிற்கும் வடிவுடைப் பொருளாகவே அமையுமாயினும் சிறுபான்மை, புலப்பாட்டின் மட்டும் படத் தக்கவைகளையும் தழுவிநிற்கும். உதாரணம், "யா காவாராயினு நா காக்க" என நாவினெழும் சொல்லையும், 'காவறுனே பார்வை யர்க்கழகு' எனக் கற்பு நிலைமையையுங் கொண்டமை காண்க.

ஆமா கவயம் காட்டா வாரும்
எருமையும் பசுவுமவையு மென்ன
வருபவை மூன்றுமா னெனப்படுமே. —திவாகரம்.

கா - வளர்

வினைச்சொல்—ஏவல்

[க் + ஆ—கா]. கா—வளர். வளரச்செய், எடுத்து வளர் - அம்மரத்தைக் கா (வளரச்செய்). தாயற்று அழும் இக் கைக் குழந்தையைக் கா (எடுத்து வளர்) என வழங்கல் காண்க.

கா - பாதுகா

வினைச்சொல் - ஏவல்

[க் + ஆ = கா]. கா = பாதுகா. தொடவும் படவுங் கூடிய ஓர் வடிவுடைய நிலையுயிர்ப் பொருளையோ, அலையுயிர்ப் பொருளையோ, ஓர் கெடுதியும் அணுகாமல் இராப்பகலாய் அதன்மீது உன் ஐம்புலனும் மனமும் பற்றி நிற்கும் எண்ணத் துடன் காவல்செய்து, வளர்வி எனவும், பகைக்கோ, கெடு திக்கோ அஞ்சிவந் தடுப்பவரை, பகை அணுக வொட்டாமலும், ஒரு கெடுதிக்கும் உள்ளாகாமலும் கண்ணுண்டாய்க் காத்திருந்து காப்பாற்று எனவும் ஏவுதற்குக் கா, பாதுகா, என்னலாம். ஆசானிடத்தும் இறை வணக்கத்தும் தன்னைத் துன்பத்திருந் தும் மீட்டுப் பாதுகா, கா வெனவும் வேண்டிக் கொள்ளலாம்.

கா - காப்பாற்று

வினைச்சொல்—ஏவல்

[க் + ஆ—கா]. கா - காப்பாற்று. தொடவும் படவும் கூடிய வடிவுடைய நிலை உயிர்ப்பொருளை அல்லது பொருளின் தொகுதியை அதன் வளர்ச்சிக்கும் நிலைப்புக்கும் ஏற்றபடிக்கு வேண்டுவன ஊட்டிக் கா - காப்பாற்று எனவும், அவ்வகை அலை உயிர்ப்பொருள், அல்லது பொருளின் தொகுதி குறைபாடு களுடன் அலைக்கழிந்து நிற்கும் வேளையில், குறைவகற்றி நிலை பெறச் செய்து கா - காப்பாற்று எனவும், ஒருவனை அல்லது ஒரு குடும்பத்தைத் தத்தளித்துத் திரியாமல் நிலைநிறுத்திக் கா - காப்பாற்று எனவும் ஆகும்.

கா - எதிர்பார் (பொறுத்துநில்)

வினைச்சொல் - ஏவல்

[க் + ஆ—கா]. கா - எதிர்பார்த்திரு மேற்கூறிய வண் ணம், நிலைஉயிர்ப்பொருள் வகையை, தன் எண்ணம்போல் வளர்ந்தேறும் வரைக்கும், அந்நிலைமைக்கு எதிர்பார்த்துக் காத்து நில் என்பதற்குக் கா - பொ[illegible]

தன்னில் நீங்கி நிற்கும் அலைஉயிர்ப் பொருள்கள் முன்னிலைக்கு வரும்வரைக்கும் எதிர்பார்த்துக் காத்துநில் - (கா) என்றும் வழங்கும்.

கா - அளி

வினைச்சொல் - ஏவல்

[க் + ஆ—கா]. மேற்காட்டிய தொடவும் படவும் தக்க வடிவுகொண்ட இருவகை உயிர்ப்பொருள்களுள் யாதேனும் தன்னால் ஆற்றாத வருத்தங்கொண்டு தளருங்கால் அதற்கு ஆதரவாக வேண்டுவன இயன்ற அளவில் புரியும் வருத்தம் ஏற்று ஆதலைச் செய்து பரிந்துநில் என்பதற்கு, கா - அளி எனல் அமையும்

கா - அரசாள்

வினைச்சொல் - ஏவல்

[க் + ஆ + உ = காவு = கா]. கா - காத்தளித்தல் + உ— மேல், நடு - (அங்கு இங்கு என்னும் சேய்மை அண்மை அற்றநிலை) மேற்கூறிய வண்ணம் தொடப்படத்தக்க வடிவுடை யுயிர்த் தொகுதிகளாகிய குடிகளைக் காத்தளிக்கும் பொறுப்பை மேற்சுமையாக ஏந்தல்கொள் அல்லது நடுக்கொண்டு தாங்கு என அமைதலின், அரசாள் என்றது.

கா - காத்தல், காப்பு, காவல், காவுதல்

வினைமுதல் தொழிற்பெயர்

[க் + ஆ—கா]. கா—காத்தல், அரசாளல், அளித்தல், எதிர் பார்த்துப் பொறுத்துநிற்றல், காப்பாற்றுதல், பாதுகாத்தல், வளர்த்தல், காவல்செய்தல் எனவும், காப்பு—ஓம்பல், பாது காத்தல், வளர்த்தல் எனவும், காவல்—காத்தல் எனவும், (காவு—கா) - காவுதல்—சுமத்தல், தோட்சுமை யெடுத்தல் என வும் ஆம். இவற்றுள் கா—காப்பு, காவல், தொழிற்பண்பு.

கா - வருத்தம் (துன்பம்)

தொழிற் பண்புப்பெயர்

[க் + ஆ + உ—காவு—கா]. மனதிற்படும் நிலைமையில் உருப் பட்டுத் தடித்து மேற்கொண்டு பொறுத்துச் சுமையாய் நின்று காவுறுத்துதலின், வருத்தம் (துன்பம்) எனல் ஆயிற்று.

திதிநிலை பெறுத்தல் நோக்கல் புரத்தல்,
காத்த லென்னக் கழறப் படுமே. —திவாகரம்.
காவென்ப துலாம்பூஞ் சோலை காத்தல்,
தோட்சுமை நாற்பேரே

கா - வலி

தொழிற் பண்புப்பெயர்

[க்+ஆ+உ—காவு—கா]. மனதிற்கும் உடலுக்கும் தென்படும் நிலைமையில் வல்லமை என்ன உருப்பெற்று நடுநின்று காப்புறுத்தும் பண்பாதலின், வலி எனலாயிற்று.

கா - காவடி

பெயர்ச்சொல்

[க்+ஆ+உ—காவு—கா] காப்புடைக் கடவுளுக்கும் தற்காப்புக்குமாகிய காவுப் பொருளை ஏந்தி நிற்றலின், காவடி. இது ஓர் ஆகுபெயர்.

கா - சோலை

பெயர்ச்சொல்

[க்+ஆ—கா]. கா - வளர்த்தலின் ஆக்கமாய் எழுந்த மரச்செறிவாதலின் சோலை எனல் ஆயிற்று. [காவு - கா வெனவும் அமையும்].

கா - பூந்தோட்டம் (பொழில்)

பெயர்ச்சொல்

[க்+ஆ—கா]. கா - சோலை என்னும் அமைதி போலவே, அவ்வகையி னெழுந்த பூக்களையுடைய மரம், செடி, கொடிகளின் செறிவாதலின் பூந்தோட்டம் பூம்பொழில் எனல் ஆயிற்று. இதுவும் காவு - கா வெனும் அமைதிக்கும் பொருந்தும்.

கா - துலை (நிறைகோல்)

பெயர்ச்சொல்

[க்+ஆ—கா]. கா-விற்போன் கொள்வோன் ஆகிய இருதரத்தவர்கட்கும் பொதுவாய்த் தன்னிலிடும் பொருளின் நிறையைத் திட்டமாய்க் காத்துத் தொடப்படக்கூடிய வடிவுடைய கருவிப் பொருளா யமைதலின் துலை எனல் ஆயிற்று. இதுவும் காவு - கா வென்றாய், தன்னில் இடும் பொருளையும் அப்பொருளின் நிறையையும் காவுவதோர் கருவி எனினும் பொருந்தும். [காவு - சும, தோட்சுமை எடு எனலின்].

'கா' வென்பது 'கா - கா' வெனும் காக்கையை ஒலிக்குறிப்பாய்க் கூவி அழைத்தற்கும் துணையாம். ஆனால் கா - என்பது, முன்னிலை ஏவலடுத்த அசைச்சொல்லாய், "மேனிவட் காண்டிகா" என்பதிலும் தக்கவாறு புலப்படுத்து என்னும் குறிப்பாலமையும். முன்னைய தொன்றமே ஒலிக்குறிப்பு எனக் கொள்க.

காப்பு

நாலார ணன்றாதை தோழ னானே நாமமுயர்
குலமரபி னுமம் பெற்ற
* மேலான வைங்கோட்டையன்முத் திரையி னுக மெய்ப்புகழை
யான்புவியில் விளம்ப வேத
நூலாயுந் தமிழ்வாணி வாக்குண் டாக நுவலரிய
பரஞ்சோதி நோக்குண் டாக
வேலோன்முன் னவன்கரமைந் துடைய தொந்தி விநாயகன்பொற்
பதந்தலையின் மேற்கொண் டேனே.

நான்கு வேதங்களைத் தந்தருளிய பிரமனது தந்தையான திருமாலின் இராமாவதாரத்தில், இராமனுக்குத் தோழனாகிய குகனது சிறப்புயர்ந்த குலமாகிய மறவர்குலம் என்னும் பெயர் பெற்ற மேன்மை பொருந்திய ஐங்கோட்டை நாட்டவர்கள் என்னும் சிறப்புக் குறியீடுடையார்களின் உண்மையான புகழை நான் உலகத்தோர்க்குக் கூற, வேதநூல்களை ஆராய்கின்ற கலைமகளின் அருள் வாக்கு உண்டாமாறும், புகலுதற்குரிய பேரொளியாகிய சிவபெருமானின் அருள்நோக்கு உண்டாமாறும், வேலைக் கையிற்கொண்ட முருகனது முன்னோனான ஐங்கரமும் பெருவயிறுமுடைய விநாயகப் பெருமானது அழகிய திருவடிகளை என் முடியிற் சூடிக்கொண்டேன்.

அவையடக்கம்—நூல்

நாவலந் தீவதிற் பாண்டிமண் டலமுதல்
நவின்றவெண் ணெழுதேசமு
நடாத்துசெங் கோல்வழுதி யரசுநிலை யிட்டாளு
நானிலந் தன்னிற்பாதி
காவலன் பெருமைமா பிற்சிறி தறிந்ததிக்
காசினிதனில் தமிழினால்
கற்றோர்கள் பொற்பார்த சன்மானி சென்னியிலக்
கருணைபெற வைத்தறி விலேன்
பாவலன் போலவுரை செய்கின்ற புன்சொலிது
பஞ்சலட்சண காவியப்

---

* இரண்டாம் அடியிற் சீர்கள் மிகுந்து காணப்படுகின்றன

பாவலர் பொறுத்தறிந் தறியாத சொலுமதுப்
பாகத்தினிற் பகர்செய்வீ
ராவதங் காமாகோ ணுத்துவை யாகவுண்
டாக்கல்பெரி யோர்க்கடைவதா
மஞ்சலி புரிந்துவகை யிங்கித முடன்செவிப்பு
லம்புவியுளோர் கேளுமே.

நாவலந்தீவு என்னும் இப்பூவுலகில் பாண்டிமண்டல முதலாகச் சொல்லப்பட்ட ஐம்பத்தாறு தேயங்களையும் செங்கோலாட்சி புரியுமாறு பாண்டியன் அரசாட்சியை நிலைபெறச் செய்து, ஆட்சிபுரியும் பூமியிற் பாதியைக் காக்குமாறு அரசனால் அளிக்கப்பெற்றதனாற் சிறப்புற்ற (மறவர்) குலத்தின் பெருமையை இந்த உலகில் நான் ஒரு சிறிது அறிந்திருப்பது தமிழ் மொழியினால்; கற்றோர்களின் திருவடிகளை மதித்து அவர்தம் கருணையைப் பெறுமாறு முடியிற்சூடி, அறிவில்லாத நான் புலவனைப்போல் சொல்லுகின்ற இந்த அற்பமொழிகளை, ஐந்திலக்கணங்களையும் காவிய நூற்களையும் அறிந்த புலவர்கள் பொறுமையுடன் கேட்டு, தெரியாமற் சொல்லுமவற்றை இனிய வகையிற் சொற்றிடுமாறு அருள் செய்வீராக; மற்றும், கூறியவற்றுள் காட்டுப் பசு நாவாற் சுவை யுணருமாபோல் உணர்ந்து கொள்வது மேம்பட்டுயர்ந்த பெரியோர்தங் கடமையாம்; ஆதலின் கைகுவித்து வணங்கி யான் கூறுவதைப் பாகுபாடான முறையிற் பூமியிலுள்ளீர் கேட்பீராக! (க)

தருவின்மலை யத்துவச னருண்மும் முலைத்தடா
தகைசக தலம்புரக்கத்
தருமுக்கி ரக்குரிசில் தனியரசி னுக்குதவி
தருதுணைவர் வேணுமென்றே
திருவுதர கருவினிற் றந்ததும் வளரரசு
நிர்க்கமுங் கற்பினிலையுஞ்
செய்விசய மும்மவனி வரசுபுரி கின்றமுறை
செங்கோன்மை யிற்பாதியுங்
கருமுகில் வணற்குரிய தோழமையி னட்புமொரு
காலமற வாதபேருங்
கயிலையர னுக்குமுயர் ககனவர சுக்குமெழு
காசினியின் மன்னவர்க்கும்

*பெருமை பெறு தலைவனென வும்பெயர் விளங்கிடப்
பிறவியுதரக் கடையிலே
பிரவேச மானதும் பேருலகி லுற்றதும்
பேதையேன் பேசலுற்றேன்.

(ஈகையால்) கற்பகதருவை யொத்த மலையத்துவச பாண்டியன் பெற்ற மூன்று தனபாரங்களையுடைய தடாதகைப் பிராட்டி பாண்டி நாட்டை யாளவும், உக்கிரகுமார பாண்டியனது ஒப்பற்ற அரசாட்சிக்குத் துணைபுரியவல்ல துணைவர்கள் வேண்டுமென்றெண்ணியும்,, அழகிய தன் வயிற்றிடமாகத் தோற்றுவித்ததும், ஓங்கி வளரும் அரசாட்சியின் நிலையும், கற்பின் தகுதியும், அடைந்த வெற்றியும், பிறர்கண்டு பேசுதற் கரிதாக அரசாட்சி புரிகின்ற முறையில் செங்கோன்மை நடாத்துதலிற் பாதி யரசு பெற்றதும், கரியநிறமுடைய திருமாலுக்கு (இராமபிரான்) நட்புரிமை பெற்று நிற்கு நிலையும், எக்காலத்தும் மறத்தற்கு உரியதல்லாத பெயரும், கைலையதிபனான சிவனுக்கும், தேவர்க்கரசனான இந்திரனுக்கும், எழுச்சியுற்ற உலக மன்னவர்களுக்கும், பெருமை பெற்ற தலைவன் என்னும் பெயர் விளங்கிடப் பிறவியைத் தருவதாகிய வயிற்றிடத்தே தோன்றியதும், பூவுலகிற் பிறந்து விளங்கியதும், அறிவில்லாத நான் சொல்லத் தொடங்கினேன். (உ)

நாவலோ கத்திலெண் ணேழுதே சம்பரவு
நாகிலாக் கண்டனுமீ
னவனாணை யாக்கினா சக்கர முயர்த்திட
நடாத்துவள முற்றநேமிப்
பூவுலோ கத்தினிற் பாதிகாவ னிற்ற
புரந்தமற வன்பிறந்ததும்
புகழ்பெற்ற செயல்கொற்ற மனுவிற்சொல் வழுவாது
புகல்புலமை நிலைநிற்கவே
தேவனா கத்தலைவ னாகவிம் மையில் வீடு
செகதலத்திற் பெற்றதும்
செகவிருது மிகவிருது வழுதிதர வெய்திய
தினவரிசை பெறுதிறமையு

* பெருமை பெறு என்று தொடங்கும் அடிக்குமுன் "கற்பின் மரபிற் பெண் கொடாத விறல் வீரமுங், கருணைபெறு தேவனெனவும்" என்னும் அடி மிகுந்து காணப்படுகிறது.

மேவு பதி னெண்புரா ணத்திலும் விளங்கிட
விதித்தமரபின் செயலும்வான்
மேவட்ட திக்குந் துலங்கத் திசைக்கம்ப
மேல்நின்றதும் புகலுவாம்.

சம்புத் தீபத்தில் ஐம்பத்தாறு தேசங்களும் புகழ்ந்து சொல்லு கின்ற, இளமையில்லாது தோன்றும் முதுபகுதிக்கிறையாகிய மீனக் கொடியையுடைய பாண்டியன் ஆணையும் செங்கோன்மையும் மேம் பட்டு விளங்கிட நடத்துகின்ற வளப்பம் பொருந்திய வட்டமான உலகில் பாதியைக் காவன்மை பூண்டு காப்பாற்றிய மறவர் தோன் றியதும், மேம்பாடுடைய புகழ்ச் செயலும், வெற்றியும், மநுநீதி தவறா மையும், சிறப்புறச் சொல்லும் புலமையும் நிலைபெறுமாறு, தேவனாக வும், தலைவனாகவும், இவ்வுலகில் பிறர் அடிமையில்லா விடுதலையைப் பெற்றதும், உலக விருதுகளையும், மிக்கபிற விருதுகளையும் பாண்டி யன் அளிக்க நாள்தோறும் பெறும் வரிசைபெறு வல்லமையும், அடையப்பெறும் பதினெண் புராணத்திலும் விளங்கிடுமாறு நியமித்த குலத்தின் செயலும், ஆகாயமளாவும் எட்டுத் திசைகளிலும் விளங்கிடு மாறு திசைக்கம்பம் நாட்டி நின்றதும் சொல்லுவாம். (௬)

பூவுலகி லாதிதிரு மாலுதர வுந்தியிற்
பூத்தமறை யிற்பிறந்தம்
புயமா திருந்ததட மார்பன்மா தொடுவனம்
புக்குநா ளிற்புகாத
காவிறை யாற்றைக் கடத்திவிடு குகனைவெகு
காதலுறு தோழமையெனக்
கருணைபுரி யுபசார சற்கார வஞ்சனிற்
கைமா றியற்றிநிற்றி
யாவினை யாமனைசொல் பதினாலு வருடநெடி
தடவிவன மீதடைந்தே
அபிஷேக நிலைமைபெற் றயோத்தியை யாள்வதற்
கப்போது வருவமென்றே
மூவுலகமும் புகழ அவயத்த நல்கிமனு
முறைமையுட னேகுபொழுதே
மூப்பொழுது மறவனென நிற்குமெயி னன்சொன்ன
மொழிவுறை கின்றமறமே.

தமிழ்நாடு ...
19965

Reg. No. M. 1725 1934 Sept.—Oct.

கழகப் புதிய வெளியீடுகள்

	ரூ.	அ.
கலைபயில் கட்டுரைகள் ராப்பர் விலை ரூ. 1 0		
லைப்ரேரிப் பதிப்பு	1	4
மனோன்மணீயம் (அரிய தமிழ் நாடகம்)		
Prof. சுந்தரம்பிள்ளை M.A., 3-ம் பதிப்பு		
கலிக்கா ரூ. 2 12 ரெக்சைன்	3	0
திருப்புகழ்த் திரட்டு 128 பாடல்கள் (3-ம் பதிப்பு)	0	8
மாணவர் திருப்புகழ் (புதிய பதிப்பு)		
(பள்ளிச் சிறுவர்கட்கெனத் தொகுக்கப் பெற்றது)	0	4
ஜகதீச சந்திர போஸ் வரலாறு		
ராப்பர் அணா 10 லைப்ரேரிப் பதிப்பு	1	4
திருக்குறள் அறத்துப்பால் தண்டபாணி விருத்தியுரை	1	12
சிவகாமி சரிதை உரை	0	7

யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதரவர்கள் பதிப்பு நூல்கள்.

	ரூ.	அ.	பை.
திருக்கோவையாருண்மை	0	8	0
சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத் திரட்டு	1	8	0
திருவேரகத்தந்தாதி உரை	0	2	6
புட்பவிதி	0	0	6
சிவதத்துவ விவேகம்	0	0	6
திருக்கருவை வெண்பாவந்தாதி	0	0	6
ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரையுடன்	0	1	0
நித்தியகரும விதி	0	0	6
சந்தானுசாரியர் புராண சங்கிரகம்	0	1	0
திருச்செந்திலந்தாதி உரை	0	1	6
மூத்தக பஞ்சவிஞ்சதி	0	1	0
பட்டினத்தார் பாடற்றிரட்டு	0	1	0
நால்வர் நான்மணிமாலை பெரியநாயகி விருத்தம் முதலியன	0	1	0
விநாயக புராண உரை 1820 பாட்டு	2	8	0
கந்தபுராணம் மகேந்திர காண்டம் உரை	2	8	0
,, உபதேச காண்டம் உரை	3	0	0

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
6, பவழக்காரத் தெரு, சென்னை

Printed by Mr. C. M. Govindarajan, at The Progressive Printers, Cor. Merchant Street, Madras, and Published by Mr. V. [illegible]
[illegible] S. I. S. S. W. P. Society Tinnevelly Ltd.